செம்மண்

நிலம் 01 துகள் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆடி 18 - 24 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-

யாழ்ப்பாணத்தில் உதிக்கிறது இலங்கைச் சைக்கிள் கழகம்

கே.அமுதன், யாழ்ப்பாணம் 18

ஒரு காலத்தில் சைக்கிள்களின் நகரம் என்று வர்ணிக்கப்பட்ட யாழ்ப்பாண நகரத்தில் இலங்கையின் முதலாவது சைக்கிள் கழகம் தொடங்கப்படவுள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் இந்தப் புதிய கழகம் தொடங்கப்படும் என்று கழகத்தின் துணைத் தலைவர் செல்வராசா நந்தகோபால் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழரான சுரேஷ் கணபதியின் சிந்னையில் உதித்த இந்தக் கழகத்திற்கான இலச்சினையைத் தெரிவு செய்வதற்கான போட்டி முகப் புத்தகத்திலே மிக விறுவிறுப்பாக நடந்து வருகின்றது. பலரும் அதற்குத் தமது உருவாக்கங்களை அனுப்பி வருகின்றனர்.

"கொலண்டில் 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற சைக்கிள் திருவிழாவைப் பார்த்த சுரேஷின் எண்ணத்தில் இலங்கையில் நாமும் இப்படியொன்றைத் தொடங்கினால் என்ன என்று தோன்றியதன் விளைவுதான் இன்று இந்தளவிற்கு முன்னேறி வந்திருக்கின்றது. 2017ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் விதம் விதமான சைக்கிள்களை வைத்து ஒரு கண்காட்சி நடத்தியதுடன் இந்த முயற்சிக்குப் பிள்ளையார்சுழி போடப்பட்டது" என்கிறார் நந்தகோபால்.

சுற்றுலாவிகளுக்கான பொழுதுபோக்காக சைக்கிள் பயணங்களை மாற்றிக் கொள்வதும் இந்தக் கழகத்தின் நோக்கங்களில் ஒன்று. வழக்கமான சைக்கிள்களாக இல்லாமல் உலகில் காணப்படும் வெவ்வேறு விதமான, வடிவங்களிலான சைக்கிள்களில் பயணிக்கும் வித்தியாசமான அனுபவத்தை சுற்றுலாவிகளுக்குக் கொடுப்பதே இதன் நோக்கம்.

"ஒரு குடும்பத்தில் உள்ள 4 அல்லது 5 பேர் ஒரே நேரத்தில் அமர்ந்திருந்து ஓட்டிச் செல்லக்கூடிய சைக்கிள்களைக்கூட சுற்றுலாவிகளுக்காகப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம்" என்கிறார் நந்தகோபால்.

இதற்கென உலகின் பல பாகங்களில் இருந்தும் விதம் விதமான சைக்கிள்களைச் சேகரித்து வருகின்றார்கள். புலம்பெயர் தமிழர்கள் உட்பட பலரும் தம்மிடம் உள்ள மிக வித்தியசாமான சைக்கிள்களை இவர்களுக்கு அன்பளிப்புச் செய்து வருகின்றார்கள்.

யாழ்ப்பாணம், இலுப்பையடிச் சந்தியில் இதற்கென ஒர் அலுவலகம் அமைத்துக் கழகத்தைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகள் துரிதமாக நடந்து வருகின்றன.

தமது கழகத்தின் சம்பிரதாயபூர்வத்

(2ஆம் பக்கத்தில் தொடர்ச்சி)

வடக்கு கிழக்கிலும் கொரோனா பணியிலிருந்து ஒதுங்கினர் பொதுச் சுகாதார அலுவலர்கள்

நாகராசா குமரன், யாழ்ப்பாணம் 18

நாட்டில் கொரோனா பெருந்தொற்று மீண்டும் தீவிரமாகப் பரவி வரும் நிலையில் கொரோனா பணிகளில் இருந்து தாம் ஒதுங்கிக்கொள்வதாகப் பொதுச் சுகாதார அலுவலர்கள் அறிவித்துள்ளனர். அவர்களின் தொழிற்சங்கம் எடுத்த இந்த முடிவு வடக்கு - கிழக்கு பகுதிகளிலும் உடனடியாக நடைமுறைக்கு வந்து நேற்று நண்பகல் 12 மணி முதல் கொரோனா கடமைகளில் இருந்து தாம் ஒதுங்கியுள்ளனர் என்று தொழிற்சங்கத்தின் வடமாகாண பிரதிநிதி க.சதீஸ் செம்மண் இதழுக்குத் தெரிவித்தார்.

கொரோனா தொற்று ஒழிப்புத் தொடர்பான அனைத்துப் பணிகளிலிருந்தும் விலகுவதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் நேற்றுப் பகல் அறிவித்தது. சங்கம் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியுடன் நடத்திய பேச்சு வெற்றியளிக்காததை அடுத்து இந்த முடிவை அறிவித்துள்ளது.

சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலொன்று விரைவில் வெளியிடப்படவுள்ளது. எனினும், இந்த வர்த்தமானியினூடாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு, தொற்று ஒழிப்புச் செயற்பாடுகளுக்கான உரிய அதிகாரம் வழங்கப்படவில்லை எனப் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டதால் தமது முடிவு தவிர்க்க முடியாதது என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவித்தல் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து அனைத்து கொரோனா சம்பந்தமான பணிகளில் இருந்தும் விலகியதாகச் சதீஸ் தெரிவித்தார்.

"நண்பகலுடன் நாங்கள் மறு அறிவித்தல் கிடைக்கப்பெறும் வரையில் அனைத்து கொரோனா பணிகளில் இருந்தும் விலகுகின்றோம். வாக்களிப்பு தினத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பணியாற்றுவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கி அதற்கான கொடுப்பனவுகளையும் வழங்குவதற்குத் தயாராக இருந்தது. எனினும் சுகாதார

(2ஆம் பக்கம் பார்க்க)



மாட்டினார் கில்லாடி

இனியாவது விடிவு கிடைக்குமா?

அன்ரன் அஜந்தன், யாழ்ப்பாணம் 18

திருட்டு, கொள்ளை, வழிப்பறி என 100 வழக்குகளில் தொடர்புபட்ட, 20 வருடங்களாக இதையே தொழிலாகக் கொண்ட, தற்போதும் 8க்கும் மேற்பட்ட வழக்குகளில் நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரை யாழ்ப்பாணக் காவல் நிலையக் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் நேற்றுக் கைது செய்தனர்.

அவரிடம் இருந்து 13 பவுண் நகைகளையும் காவல்துறையினர் மீட்டுள்ளனர். (மீதி பக்கம் 2இல்)

மாட்டினார் கில்லாடி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வியங்காட்டில் பிறந்து நாவற்குழியில் வசித்து வந்தவரான இரத்தின சிங்கம் சந்திரகுமார் (சின்னவன் - வயது 38) என்ற நபரே காவல்துறை யினரால் கைது செய்யப்பட்டார். இவரது இரண்டாவது மனைவியுடன் தொடர்பில் இருந்தார் எனக்கூறப்படும் ஒருவர் தன்னைக் கொல்வதற்கு வெடிகுண்டுடன் இவர் காத்திருக்கிறார் என்று வழங்கிய தகவலை அடுத்து கோப்பாய், இராச வீதியில் உள்ள பாழடைந்த வீடு ஒன்றிலிருந்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து கிரனேட் ஒன்றும் மீட்கப்பட்டது என்று காவலர்கள் தெரிவிக்கின்றனர். திருடப்பட்ட நகைகளை வைத்திருந்த அவரது இரு மனைவிகள் மற்றும் திருடப்பட்ட நகையை விற்பனை செய்து கொடுப்ப வர் என்று கருதப்படும் மற்றொரு பெண், நகைக் கடை உரிமையாளர் ஒருவர் மற்றும் சின்னவனுடன் சென்று வழிப்பறி திருட்டில் ஈடுபடுபவர் எனக் கருதப்படும் மற்றொரு நபர் என மேலும் ஐந்து பேரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்களிடம் இருந்து ஆறரைப் பவுண் தாலிக்கொடி ஒன்று, நகை கள் உருக்கப்பட்ட நிலையில் இருந்த 2.5 கிராம் மற்றும் 1.5 கிராம் தங் கக் கட்டிகள், ஒன்றே முக்கால் பவுண் மற்றும் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலிகள் என்பன கைப்பற்றப்பட்டிருக்கின்றன. சான்றுப் பொருள்களான அவற்றைச் செய்தியாளர்களிடம் காண்பித்தனர் காவல்து றையினர்.

சின்னவனால் வழிப் பறிக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் ஏற்கனவே திருடப்பட்ட பல்சர்-200 ரக மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் காவல்துறையினர் தெரிவித்தனர்.

குற்றச்செயல்களுக்காக யாழ்ப்பாணத்தில் தேடப்பட்டு வந்த நிலையில் வவுனியாவுக்குத் தப்பிச்சென்ற சின்னவன் அங்கும் திருட்டில் ஈடுபட்டு காவல்துறையினரிடம் மாட்டி வவு னியா நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த ஆனி மாதமே பிணையில் வெளியே வந்திருந்தார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணம் திரும்பிய இவர் ஒரு மாத காலத்திற்குள் 5 வழிப்பறிச் சம்பவங்களில் ஈடுபட்டார் என்று காவல்துறை யினர் கூறுகின்றனர். யாழ்ப்பாணம் நீதிமன் றத்தில் 8 பிடியாணைகள் இருக்கின்றன என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சின்னவன் வவுனியா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த சமயத்தில் அவரது இரண்டாவது மனைவி இன்னுமொரு ஆணுடன் சேர்ந்து வாழத் தொடங்கியிருந்தார். இதனால் ஆத்திரமடைந்து அந்த நபரைக் கொல்வதற்காகவே தன்வசம் கிரனேட்டை வைத்திருந்தார் என்று சின்னவன் வாக்குமூலம் வழங்கியிருக்கிறார்.

நாள் ஒன்றுக்கு ஒரு கிராம் கெரோயின் போதைப் பொருள் தனக்குத் தேவை என்பது டன் தனக்குப் பல மனைவியர் இருப்பதனால் அவர்களுக்குப் பணம் வழங்குவதற்காகவும் தான் திருட்டில் ஈடுபடுகிறார் என்று சந்தேக நபர் தம்மிடம் தெரிவித்தார் என்று காவல்துறை யினர் தெரிவித்தனர்.

20 வருடங்களாகத் தான் திருட்டில் ஈடு பட்டு வருகின்றார் என்றும் அவர் காவல்துறை யினரிடம் தெரிவித்துள்ளார். 2004ஆம் ஆண்டு தன்னைப் பிடிப்பதற்காக விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சுட்டதில் தனது காலில் காயம் ஏற்பட்டதாகவும் ஆனா லும் தான் தப்பியோடிவிட்டார் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

வடக்கு கிழக்கிலும்.....

(முன்பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு சுகாதாரத் துறைசார் ஏனைய சங்கங்களின் தூண்டுதல் காரணமாக எமது சங்கத்தின் கோரிக்கை களை நிறைவேற்றத் தவறியுள்ளது. மேலும் கொரோனா காலகட்டத்தில் அயராது பணியாற்றிய பொதுச் சுகா தாரப் பரிசோதகர்களின் நடவடிக்கை தொடர்பாக அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தவறான முறை யில் சிங்கள ஊடகம் ஒன்றுக்குப் பேட்டி அளித்துள்ளார். ஆகவேதான் நாம் கடமைகளில் இருந்து விலகு கின்றோம்.

நாளை 10 மணியளவில் கடவத்த பகுதியில் அனைத்து மாவட்ட சங்கங்களுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளது. அந்தச் சந்திப்பின் முடிவிலேதான் அடுத்த கட்டம் தீர்மானிக்கப்படும் - என்றார்.

யாழ்ப்பாணத்தில் உதிக்கிறது.....

(முன்பக்கத் தொடர்ச்சி)

தொடக்கத்தை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் செப்ரெம்பர் 13, 14ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாக நந்தகோபால் தெரிவித்தார். அந்த நிகழ்வோடு ஒட்டியதாக சைக்கிளின் 200 வருட வர லாற்றைக் கூறும் கண்காட்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்படுவதாக அவர் கூறினார்.

மிக மிகத் தொடக்க காலத்தில் பயன்படுத்தப்பட்டவை முதல் அண்மையில் பயன்படுத்தப்பட்டவை வரையான சைக்கிள்கள் பலவும் இந்தக் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்படவுள்ளன. அத்தோடு சேர்த்து சிறுவர்களை மகிழ்விக்கும் வகையில் சைக்கிள் மாயாஜால வித்தை களும் இடம்பெறவுள்ளது.

"மேற்கு நாடுகளில் சைக்கிள் கழகங்கள், கண்காட்சிகள் நீண்ட காலமாக இருக்கின்றன. இலங்கைக்கு, ஏன் தெற்காசி யாவுக்கே இந்த முயற்சி புதியதாக இருக்கின்றது. ஆனாலும் அதனை வெற்றிகரமாக மக்களின் ஒத்துழைப்போடு செயற்ப டுத்துவோம் என்கிற நம்பிக்கை இருக்கின்றது" என்கிறார் நந்தகோபால்.

"நாங்களெல்லாம் இனித் தாலியைக் கிராம் கணக்கில் செய்து மஞ்சள் கயிற்றில் கட்டித் தான் தொங்க விட வேணும் போல" என்று சலித்துக்கொள்கிறார் அ.அஜந்தன். 28 வயதான அவர் ஓரிரு மாதங்களில் திருமணம் செய்வதற்கான ஆயத்தங்களில் இருக்கிறார். தங்கம் விலை ஆகாயத்தில் பறக்கத் தொடங்கி யிருப்பதால் என்னசெய்வது என்று தெரியாமல் விழி பிதுங்கிப் போயிருக்கிறார்.

தேர் வடத் தோடாக் கயிறு போன்று தாலி கட்டிக்கொள்ளும் சமூகத்தில் தன் மனைவிக்கு (அது அவர்களின் காசிலானாலும்) அப்படியொரு தாலியைக் கட்ட முடியாமல் போய்விடுமோ என்கிற கவலைதான் அவருக்கு. சாதாரணமாக 9 பவுண் அல்லது 11 பவுணில் தாலிக் கொடிகட்டும் யாழ்ப்பாணத்தவர்கள் இன்று திருமணம் செய்தவதானால் தாலிக்கு மட்டுமே 11 லட்சம் ரூபாய் வேண்டும்.

பவுண் ஒரு லட்சத்தை எட்டிப் பார்த்துவிட்டிருக்கும் நிலையில் புதிதாய் திருமணம் செய்பவர்கள் இவ்வளவு பணத்திற்கு எங்கே போவது? அதுவும் கொரோனா பெருந்தொற்றால் வேலைகள்கூட அப்படியும் இப்படியுமாக இருக்கையில் பணத்திற்கு என்ன செய்வது?

அப்படித் தங்கத்தின் விலை எகிறி எகிறி ஆகாயம் ஏறுவதற்கு என்னதான் காரணம்? மனிதர்களுக்குத் தங்கப் பசி ஆரம்பித்து விட்டதா? தங்கத்தைத் தின்னும் மனிதர்கள் பிறந்து விட்டார்களா என்ன? உணவுப் பொருளுக்கோ, உடுதுணிக்கோ, இன்னும்பிற மின்னியல் கருவிகளுக்கோ இல்லாத மசுவு எப்படியிந்தத் தங்கத்துக்கு வந்தது?

இந்தப் பெருந்தொற்றுப் பீதி ஏற்பட்டுள்ள காலத்தில் தட்டுப்பாடுகளும் கேள்விகளும் அத்தியாவசியப் பொருள்களுக்குத்தானே அதிகரித்திருக்க வேண்டும்? மாறாகத் தங்க விலை மலையேறியுள்ளதே, எப்படி?

பலருடைய சிந்தனையையும் ஆட்கொண்டிருப்பவை இத்தகைய கேள்விகள்தாம். பேச முடியாத அந்த உலோகத்தைப் பற்றி இந்த நெருக்கடியான காலத்தில் முழு உலகமுமே பேசிக்கொண்டி

■ பிரேம், தாஸ்

கொரோனா வைரஸால் முழு உலகும் முடங்கிப்போயுள்ளது. மக்கள் மத்தியில் கொரோனா குறித்த அச்சம் பற்றிப் படர்ந்துள்ளது. தொழில் வாய்ப்புகளை இழந்தும், அன்றாடச்செயல்களில் இருந்து ஒதுங்கியும் வாழ வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். நாடுகளுக்கிடையிலான வர்த்தகத் தொடர்புகள் செயலிழந்துள்ளன. பங்குச் சந்தைகளின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுவிட்டன. கொரோனாவால் அனைத்துமே முடங்கிப்போயுள்ள நிலையில் தங்கத்தின் விலை கிடு கிடுவென உயர்ந்து உச்சம் தொட்டு நிற்கிறது. சுருங்கச் சொன்னால் கொரோனாவுக்கிடையில் நாயகத்தனம் புரிகிறது தங்கம்!

இந்த விலையுயர்வு புதிதல்ல!

கொரோனாவுக்கு மத்தியில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்குமா இல்லையா என்கிற பரபரப்புக்குக் கொஞ்சமும் குறைவில்லாமல் தங்கத்தின் விலை அதிகரிப்பும் மக்கள் மனங்களை அரித்துக்கொண்டே இருக்கின்றது. மற்றொருபுறத்தில் மக்களிடம் உள்ள தங்கத்தை வெறும் உலோகமாக வைத்திருக்காமல் அதனை முதலீடாக்கிக்கொள்ளும் முயற்சியில் அரசும் குதித்துவிட்டது. தங்க நகைகள் மீதான கடன் வட்டி 9 சதவீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

கொரோனாவால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக உலக நாடுகளில் பலவும் பணத்தை அதிக அளவில் அச்சடிக்கத் தொடங்கி விட்டதால், இதுவரை நுகர்வோர் பொருள்களின் விலை அதிக அளவில் உயரவில்லை. தேவைக்கும், விநியோகத்துக்கும் இடையில் சிக்கல் உருவாகியிருக்கிறது. இது பணவீக்க விகிதத்தை அதிகப்படுத்தும். அப்படிப் பணவீக்கம் ஏற்பட்டால் தங்கமானது நல்ல வருவமானத்தைப் பெற்றுத் தரும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இதனாலேயே இந்த நெருக்கடியான காலத்தில் முடங்கிப்போயுள்ள அனைத்து விதசிறிய, பெரிய வர்த்தகத்தரப்பினர் மற்றும் சாதாரண மக்களின் பார்வை தங்கத்தின் மேல் விழுந்துள்ளது. இதனால் சடப்பொருளான தங்கத்துக்கான கேள்வி அதிகரித்து, விலையும் அதிகரித்துள்ளது. தங்கத்துக்கான விலை அதிகரிப்புக்குக் கேள்வி அதிகரிப்புமாத்திரம் காரணமல்ல. பெருந்தொற்றால் உண்டான முடக்கத்தால் ஏற்பட்ட தங்க இறக்குமதி வீழ்ச்சியும் காரணமே. இவ்வாறு காரணங்களை அடுக்கடுக்காகக் கூறினாலும். தங்கம் கண்டறியப்பட்ட காலத்திலிருந்து இன்று வரையான ஒட்டு மொத்த மதிப்பிடலின்படி அதன் விலைப் போக்கு அதிகரித்துக் கொண்டுதானிருக்கின்றதே தவிர குறைந்து செல்லவில்லை.

இலங்கையில் விலை நிலவரம்

தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்வதும் அவ்வப்போது மிகச் சிறயளவில் குறைவதும் நடந்து வந்தாலும், கடந்த சில ஆண்டுகளாகவே தங்கத்தின் விலையில் சடுதியான அதிகரிப்பு இருந்து வருகிறது. 2010ஆம் ஆண்டு 37 ஆயிரம் ரூபாயாக இருந்த தங்கத்தின் விலை 2015ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 44 ஆயிரம் வரைக்கும் உயர்ந்தது. 2018இல் 54 ஆயிரம் ரூபா வரைக்கும் 2019இல் 61 ஆயிரம் ரூபா வரைக்கும், 2020 ஜனவரியில் 74 ஆயிரம் ரூபாய் வரைக்கும் உயர்ந்தது. வெள்ளிக்கிழமை நிலவரப்படி 24 கரட் தங்கத்தின் விலை 97 ஆயிரத்து 500 ரூபாயாக இருந்தது. கடந்த வாரம் ஒரு லட்சம் ரூபாய் வரைக்கும் உயர்ந்திருந்த விலைசற்றுஇறக்கம்கண்டுள்ளது. ஆனால், விலை இன்னும் சில மாதங்களுக்குத் தொடர்ந்து உயரும் என்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள்.

விலை ஏன் உயர்கிறது?

உலகில் நிச்சயமற்ற நிலை ஏற்படும்போதெல்லாம் மக்கள் தங்கத்தில் முதலிடுவதற்கு விரும்புவது இயற்கையாகவே நடப்பது என்கிறார்கள் பொருளாதார வல்லுநர்கள்.

"முதலீட்டாளர்களோ பொது மக்களோ லாபத்தைத் தான் எதிர் பார்த்து ஓடுகிறார்கள். பங்குச் சந்தை, நிலையான வைப்புத் தொகை, பல்வேறு வகையான பத்திரங்கள் அல்லது தங்கத்தில் - முதலீடு செய்வதன் மூலம் இந்த லாபத்தைப் பெறுகிறார்கள். இயல்பு நிலை நிலவும் பட்சத்தில், பங்குச் சந்தை, பத்திரங்கள் போன்றவை இந்த லாபத்தைத் தருகின்றன. ஆனால் உலகப் பொருளாதாரத்தில் நிச்ச யமற்ற சூழ்நிலை இருக்கும்போது, முதலீட்டாளர்களின் கவனம் தங்கத்தை நோக்கிச் செல்கிறது" என்றார் இந்தியப் பேராசியர் அரவிந்த் சகாய்.

தங்கத்தால் தங்கள் முதலீட்டுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் என்றும் அதன் மதிப்பு குறையாது என்றும் முதலீட்டாளர்கள் நினைப்பதே இதற்குக் காரணம் என்கிறார் அவர். இதனால், முதலீட்டில் தங்கத்தின் மதிப்பு அதிகரிக்கிறது. இதுகடந்தஒன்றரை ஆண்டுகளாக அதிகரித்தே வருகிறது என்பது அவர் கணிப்பு.

இந்த நிச்சயமற்ற தன்மை கொரோனா வைரஸ் காரணமாக மட்டுமே ஏற்பட்டுள்ளது என்று கூறமுடியாது. முன்னதாக, சீனாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான வர்த்தகப் போரும் இந்த நிச்சயமற்ற தன்மையை

(04ஆம் பக்கம் பார்க்க)

வீண்ணைத் தொடும் தங்கம்!

கொரோனா கிரிக்கெட்...!!

-குமரன்-

உலகம் முழுவதையும் அச்சுறுத்தும் கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியில், இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் துடுப்பாட்ட அணிகளுக்கு இடையே 3 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் கடந்த 8ஆம் திகதி தொடங்கியது. இந்தப் போட்டி உலக வரலாற்றில் சிறப்புமிக்கது. ஏனென்றால் கொரோனா பயம் இருந்தபோதிலும் மேற்கிந்திய தீவுகளின் வீரர்கள் டெஸ்ட் தொடரில் விளையாட இங்கிலாந்துக்கு வந்திருந்தனர். வழமையாக நேரடியாக துடுப்பாட்டத்தைப் பார்க்கும் போது இருக்கின்ற உணர்ச்சிகளை விட இந்த போட்டியையும் இனி நடக்க இருக்கின்ற போட்டிகளையும் பார்க்கும் போது நிச்சயமாக ஒன்று, இரண்டு அல்ல, பல மாற்றங்கள் ரசிகர்களை ஆச்சரியப்பட வைப்பதுடன் கிரிக்கட்டை விரும்பாதவர்களை கூட ஒரு கணம் உற்றுப்பார்க்க வைக்கப் போகின்றன.

ரசிகர்கள் இன்றிய அரங்கு:

இந்தக் காலநிலையில் கொரோனா வைரஸ் ஒருவருக்கு இருந்தால், அவரது தொடுகை மூலம், அது மற்றவர்களுக்கும் பரவவாய்புக்கள் அதிகமாகின்றன. இவ்வாறான சூழ்நிலையில், பன்னாட்டு துடுப்பாட்டத்தை மீண்டும் தொடங்க வேண்டும் என்றால், பார்வையாளர்களை அரங்கத்தில் அமர்ந்து போட்டியைப் பார்க்க அனுமதிக்க மாட்டார்கள். அந்த நிலையில்தான் கொரோனா பரவுவதைத் தடுக்கும் நோக்கில் ரசிகர்களை அனுமதிக்காது யாருமற்ற வெற்று அரங்கத்தில் போட்டியை நடத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கை கழுவ ஏற்பாடு:

மைதானத்தில் உள்ள மாற்றம் மைதானத்தின் ஒவ்வொரு மூலையிலும் கை சுத்திகரிப்பிற்க்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். அங்கு சென்று வீரர்கள் அடிக்கடி தங்கள் கைகளை சுத்தப்படுத்த முடியும். இந்த நடைமுறையினால் நோய்த் தொற்றின் அபாயம் குறைவடைகின்றது.

கட்டி அணைக்கத் தடை:

இதுவரைகாலமும் இடம்பெற்ற போட்டிகளில் இலக்குகள் சரிக்கப்பட்ட பின்னர் பந்து வீச்சாளர் சக வீரர்களை ஆரவாரத்துடன் கட்டியணைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வந்தார்கள். ஆனால் ஆரம்பமாகியுள்ள இந்த டெஸ்ட் தொடருடன் இந்த மகிழ்ச்சியை பரிமாறும் முறை இருக்காது, மாறாக வீரர்கள் தமக்கிடையில் முழங்கைகளை முட்டிக்கொண்டு மகிழ்ச்சியை பரிமாறலாம்.



பொம்மைக் கூட்டம், பொய்ச் சத்தம்:

போட்டியின் உத்வேகம் ரசிகர்களின் ஊக்குவிப்பில்தான் உள்ளது. அதனை ஈடு செய்யவும் இத்தகைய சூழ்நிலையில், வீரர்களை ஊக்குவிப்பதற்காகவும் பொம்மைகளை கொண்ட போலி கூட்டத்தினை உருவாக்குவதோடு ரசிகர்களது உற்சாக கோசங்கள் போன்ற சத்தங்களை இசைப்பதற்கும் ஏற்பாட்டாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

பந்தை எச்சிற்படுத்த முடியாது

பந்துவீச்சாளர்களுக்கான முக்கிய பிரச்சினை என்ன வென்றால், பந்தின் பளபளப்பை அதிகரிக்க உமிழ்நீரை இனிப் பயன்படுத்த முடியாது என்பதுதான். எச்சில் மூலம் கொரோனா வைரஸ் பரவக்கூடும் என்பதால் இந்த ஏற்பாடு. இதனை மீறி யாராவது தவறு செய்தால், அவர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்படும். மீண்டும் மீண்டும் அப்படி செய்தால், அவருக்கு அபராதம் விதிக்கப்படும். எச்சிற்படுத்துவதற்கு மாறாக வீரர்கள் பந்தைப் பளபளப்பாக்கத் தம் வியர்வையைப் பயன்படுத்தலாம்.

கொரோனா நிபந்தனை:

உலகக் கோப்பை 2019க்குப் பிறகு, போட்டியின் போது ஒரு வீரருக்கு கடுமையான காயம் ஏற்பட்டால், அதற்கு பதிலாக களம் இறங்கும் மற்றொரு வீரர் முழு போட்டிகளிலும் விளையாட முடியும் என்று ஐ.சி.சி அறிவித்திருந்தது. அதேபோல கொரோனா காலத்திலும், ஒரு வீரருக்கு கொரோனா தொற்று அறிகுறிகள் இருந்தால், அவருக்கு பதிலாக மற்றொரு வீரர் போட்டியில் முழுமையாக விளையாட அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஐ.சி.சி. எச்சரிக்கை:

விளையாட்டரங்கில் கூட்டம் மற்றும் சத்தம் இருக்காது. மாறாக பல இடங்களில் மைக்குகள் இருக்கும். அத்தகைய சூழ்நிலையில், வீரர்களின் குரலை தெளிவாகச் செவிமடுக்க முடியும். எனவே, யாருக்கும் பிரச்சினையை ஏற்படுத்தும் வகையில் பேசக்கூடாது. மேலும் வீரர்கள் யாரும் சண்டையிட்டு, தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது என்று ஐ.சி.சி. வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

உயிர் பாதுகாப்பான சூழல்:

உலகம் முழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான ரசிகர்களை துடுப்பாட்ட வீரர்கள் மகிழ்விப்பார்கள். இதேநேரத்தில் வீரர்களின் உயிர் மிகவும் முக்கியமானது. அவர்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கிக் கொடுப்பது நிர்வாகத்தின் கடமை. எனவே போட்டிகளில் விளையாடும் வீரர்கள் அவர்கள் தங்கியிருக்கும் விடுதி களில் இருந்து மைதானம் மற்றும் மைதானத்திலிருந்து விடுதி வரை மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

உள்ளூர் நடுவர்:

சுற்றுப் பயணத்தை மனதில் கொண்டு, குறித்த போட்டியில் நடுவர் யார் என்பதை, போட்டியில் பங்கேற்கும் நாடுகளே முடிவு செய்துகொள்ளலாம். ஆனால் அந்த நடுவருக்கு அனுபவம் இருக்கவேண்டும். நடுவர் ஐ.சி.சி நடுவர் குழாமில் ஒருவராக இருந்தால் அது மிகவும் நல்லது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் அப்பால் இடம்பெற்ற முதலாவது கிரிக்கட் போட்டியில் அண்மையில் அமெரிக்க கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவரை அந்த நாட்டு பொலிஸ் அதிகாரி தனது முழங்காலால் கழுத்தை நசுக்கி கொலை செய்த சம்பவத்தை நினைவு கூர்ந்து இவ்வாறான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என இரு அணி வீரர்களும் மைதானத்தில் முழங்காலில் இருந்து தமது கண்டனத்தை வெளியிட்ட பின்னரே போட்டியை ஆரம்பித்தனர்.

ஆரம்பம் முதல் தொலைக் காட்சிகளில் பார்த்துக்கொண்டிருந்த ரசிகர்கள் மத்தியில் குறித்த போட்டியின் வெற்றி, தோல்விக்கு மேலாகப் போட்டி எவ்வாறு நடந்தேறபோகின்றதென்ற ஆவலே இருந்தது. இந்த நடைமுறைகளுடன் இடம்பெற்ற முதலாவது போட்டியில் மேற்கிந்திய தீவுகளின் வேகத்தில் இங்கிலாந்து சொந்த மண்ணிலே மண்கவ்வியது. ■

விண்ணைத்தொடும்

அதிகரித்து தங்கத்தின் விலை உயரக் காரணமாக இருந்தது. கொரோனா வைரஸ் அதன் விலையை மேலும் அதிகரித்துள்ளது.

கொரோனா தொற்றுநோயால் மக்கள் வேலை இழந்ததால், பொருளாதார வளர்ச்சி விகிதம் மேலும் குறைந்துள்ளது. முன்னதாக, வளர்ச்சி விகிதம் 5 சதவீதமாக மதிப்பிடப்பட்டது, ஆனால் இப்போது அதில் 6 சதவீத சரிவு கணிக்கப்படுகிறது.

மக்களிடம் பணப்புழக்கம் இல்லாததால் செலவு செய்யப் பணம் இல்லை, கடைகள்-உணவகங்கள், விமான நிறுவனங்கள், ரயில்வே அனைத்தும் முடங்கியுள்ளன. வேலை இழந்தவர்கள் தங்கள் குடும்பத்தை நடத்த சிரமப்படுகிறார்கள். இந்தக் காரணங்களால், நிச்சயமற்ற தன்மை அதிகரித்துள்ளது. இது கொரோனா வைரஸ் தொற்று நோய் காரணமாக ஏற்பட்டுள்ள நிலை.

இந்த நிச்சயமற்ற தன்மை மக்க ளிடையே அச்சத்தை உருவாக்கியுள்ளது, இதன் காரணமாக அவர்கள் செலவு செய்யத் தயங்குகிறார்கள். அவர்கள் பாதுகாப்பை விரும்புகிறார்கள். தங்கத்தில் முதலீடு செய்வதன் மூலம் இந்த பாதுகாப்பை அவர்கள் தேடுகிறா ர்கள். இதன் காரணமாக, முதலீட்டுத் துறையில் நுகர்வு அதிகரித்து ள்ளது.

பொது மக்கள் மட்டுமல்ல, உலகின் பெரிய மத்திய வங்கிக ளும் தங்கம் வாங்குவதை அதிகரி த்துள்ளன. இந்தியாவின் ரிசர்வ் வங்கி ஐரோப்பிய மத்திய வங்கி, சீன மக்கள் வங்கி, பெடரல் ரிசர்வ் வங்கி போன்ற வங்கிகள் இதில் அடங்கும்.

5,000 ஆண்டுகளுக்கு முன்பும், தங்கம் மிக மதிப்பு மிக்க தாகவே கருதப்பட்டது, ஏனெனில் தங்கத்தின் மதிப்பு எப்போதும் குறையாமல் அதிகரிக்கிறது என்று நம்பப்பட்டது. ஆனால் அதன் மதிப்பு ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தே வருகிறது - என்று விளக்குகிறார் பேராசிரியர் அரவிந்த சகாய்.

தங்கத்தின் விலை அதிகரிப்புக்கு 5 அம்சங்களைப் பட்டியலிடுகிறார் வெளிநாட்டுப் பங்குச் சந்தை வர்த்தகரான நயீம் அஸ்லம். கொரோனா பெருந்தொற்றின் இரண்டாவது அலை, ஐரோப்பாவின் புதிய ட்டாரிவ், அமெரிக்க - சீன வர்த்தகப் போர், அமெரிக்காவின் வேலையற்றோர் எண்ணிக்கை, வருமானத்தைப் பெருக்கும் காலம் கடந்து செல்வது ஆகியவற்றின் காரணமாக தங்கத்தில் முதலீடு அதிகரித்து அதன் விலை உயரும் என்பது அவரது கணிப்பு.

உலகப் பொருளாதார நிச்சயமற்ற தன்மை தொடர்வதால் தங்கத்தின் விலை வரலாற்றில் என்றுமில்லாத அளவு உயரத்தைத் தொடும் என்று எதிர்பார்க்கிறார்கள் நிபுணர்கள். நாடுகளின் மத்திய வங்கிகள் அல்லது பெரு நிறுவனங்கள் தமது இருப்பில் உள்ள தங்கத்தை காசுத் தேவை கருதி விற்க முயற்சித்தால் ஒரு வேளை தங்கத்தின் விலையுயர்வு தடுக்கப்படலாம். அதுவரைக்கும் அஜந்தன் போன்றவர்கள் தமது திருமணத்தைத் தள்ளிப்போடுவதைத் தவிர தேடாவளைத் தாலியைப் பெறுவதற்கு வேறு வழியில்லை.

சிங்கள மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

சிங்களப் பத்திரிகைகள், தொலைக்காட்சி விவாதங்கள் போன்றவற்றில் தெரிவிக்கப்படும் கருத்துக்களில் இருந்து ராஜ்குமாரால் தொகுக்கப்பட்டது இந்தக் கட்டுரை.

கொழும்பு - பிலியந்தலையைச் சேர்ந்த எனது நண்பர் காமினியை நீண்ட நாள்களுக்குப் பின் சந்தித்தேன். அவர் மகிந்த ராஜபக்சவின் பக்தன். காமினியைச் சந்தித்தபோது, தான் தற்போது கோத்தாபய ராஜபக்சவின் விசுவாசி என்றார். "மகிந்தவை ஏன் கைவிட்டீர்?" என்று நான் கேட்டபோது "மகிந்த ஒரு நல்ல மக்கள் தலைவர்தான் ஆனால், தற்போது சிங்கள மக்களுக்குத் தலைமை தாங்கும் வல்லமை கோத்தாபயவுக்கே உண்டு. அவர் மச்சம், மாமிசம் உண்பதில்லை. மதுபானம் அருந்துவதில்லை. இந்த நாட்டை எவ்வாறு உருவாக்கவேண்டும் என்பதில் திடமான ஒரு சிந்தனையுடன் இருக்கிறார். அவரது பேச்சுக் குறைவாகவும் செயற்பாடுகள் அதிகமாகவும் இருக்கின்றன" என்றார்.

காமினி கூறியது உண்மைதான். சிங்கள மக்களில் பெரும்பாலானவர்களின் மனநிலை இதுவாகத்தான் உள்ளது. இறுதியாக நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்கக் குடியுரிமைப் பிரச்சினை, மகிந்த தேர்தலில் இறங்காது கோத்தாபய இறங்கியமை, அவர் மீதான போர்க்குற்றங்கள் ஆகிய பல விடயங்கள் அவருக்குப் பின்னடைவை ஏற்படுத்தலாம் என்பதால் அவர் வெல்வது கடினமாக இருக்கும் என்று நினைத்த தமிழ் மக்களுக்குக் கோத்தாபயவின் வெற்றி பிரமிப்பாக இருந்தது.

தேர்தல் நடைபெறுவதற்கு 4 மாதங்களுக்கு முன் பசில் ராஜபக்சவின் நெருங்கிய செயற்பாட்டாளர் ஒருவரைச் சந்தித்தபோது அவர் இவ்வாறு கூறினார், "கோத்தாபய 15 லட்சம் மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார்." நான் ஊடகம்சார் தொழிலை நீண்டகாலமாகச் செய்து வருபவன் என்பதன் அடிப்படையில் அது சாத்தியமா? சிறிய வாக்கு வித்தியாசத்தில் வெல்வதே கடினமானதாக இருக்குமே என்றேன். அவர் கூறினார், "வடக்கு - கிழக்கைத் தவிர்த்துச் சொல்கிறேன்" என்று. எனக்கு அது மேலும் குழப்பமாக இருந்தது. தமிழ், முஸ்லிம்களின் வாக்குகள் இல்லாமல் எவ்வாறு அது சாத்தியம் என நினைத்தேன். ஆனால், அவர் கூறியதுபோலவே சஜித் பிரேமதாசவைவிட 13 லட்சத்து 60 ஆயிரம் வாக்குகள் மேலதிகமாகப் பெற்று வெற்றிபெற்றார் கோத்தாபய ராஜபக்ச. இந்த வெற்றியை அவரால் எவ்வாறு சாதிக்க முடிந்தது?

30 வருட காலப் புலிகளின் போராட்டம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் ஆகிய இரண்டுமே சிறுபான்மை இனங்கள் மீது சிங்கள மக்களுக்குள் இருந்த அச்சத்தை அதிகப்படுத்தின. வரும் காலங்களில் முஸ்லிம்களும் சிங்கள மக்களைக் கொல்வார்கள் என்ற பரப்புரை கிராமத்துச் சிங்கள மக்களை எட்டும் வகையில் பௌத்த துறவிகளிடம் கருத்தேற்றப் பட்டது. அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் மட்டுமல்லாது சிறு விகாரைகளில் இருக்கின்ற சாதாரண பிக்குகள் வரை இந்தச் செய்தி கொண்டு செல்லப்பட்டது.

2015இல் அதிபர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ச தொடர்ச்சியாகப் பௌத்த விகாரைகளை நாடிச் சென்றபோது எதிர்க்கட்சிகள், ஊடகங்கள், தமிழ் - முஸ்லிம் தரப்புகள் அதை ஏளனமாக விமர்சித்தன. ஆனால், அவைதான் மகிந்த குடும்பத்தின் மீள் உருவாக்க மையங்களாக இருந்தன.

மகிந்த குடும்பத்தில் உள்ள 102 பேர் தற்போதைய அரசில் பங்கெடுத்திருக்கின்றனர். குடும்ப ஆட்சி வரப்போகிறது, வெள்ளை வான் கலாசாரம் மீளவும் உருவாக்கப்படப்போகிறது, இராணுவ ஆட்சி வரப்போகிறது என்றெல்லாம் தேர்தலுக்கு முன்பு கட்டியம் கூறிய ஐக்கிய தேசியக் கட்சியாலோ, ஜே.வி.பியாலோ, தமிழ் - முஸ்லிம் கட்சிகளாலோ கோத்தபாய வின் வெற்றியைத் தடுத்து நிறுத்த முடிவில்லை.

சிங்கள எதிர்க்கட்சிகளின் பரப்புரைகளையும் மீறிப் பெரும் பான்மையான சிங்களவர்கள் ஏன் கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களித்தார்கள்?

தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களின் தாக்குதல்களில் இருந்து சிங்கள மக்களைக் காப்பாற்றக் கூடியவர் கோத்தாபய என்பதும் அதற்கான பலத்தை இராணுவமே வழங்க முடியும் என்பதும் அவர்களால் மட்டுமே தமது பௌத்தத்தைக் காப்பாற்ற முடியும் என்பதும் சிங்கள மக்களுக்கு உறுதிபடச் சொல்லப்பட்டிருந்தது.

நல்லாட்சி என்று கூறப்பட்ட மைத்திரி – ரணில் ஆட்சியில் மத்திய வங்கி ஊழல் தொடக்கம் பல்வேறு குளறுபடிகள் இருந்தன. மைத்திரிக்கும் ரணிலுக்கும் இடையிலான முரண்பாடு தமிழ் - முஸ்லிம் மக்களைத் திருப்திப்படுத்தியபோதும் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தவில்லை. "மகிந்த அபிவிருத்தியைச் செய்துவிட்டுக் களவெடுத்தார். ரணில் அபிவிருத்தியைச் செய்யாமலே மத்திய வங்கியிலிருந்து நேரடியாகக் களவெடுத்தார்", "கொழும்பட்ட கிரி அப்பிட்ட கெக்கரி" (கொழும்பிலுள்ளவர்கள் தாயின் முலையிலிருக்கும் பாலை முழுவதுமாக உறிஞ்சிக் குடித்துவிட்டு கெக்கரிக்காய் போல பால் இல்லாத முலையையே கிராம மக்களுக்குத் தருகிறார்கள்) என்றெல்லாம் சிங்கள மக்கள் மத்தியில் முணுமுணுப்புகள் இருந்தன. இத்தகைய நிலைகளே நல்லாட்சியின் வீழ்ச்சிக்கு வித்திட்டன.

கோத்தாபய அதிபராகப் பதவியேற்றது முதல் முக்கிய பதவிகளில் இராணுவ உயரதிகாரிகளை அமர்த்தியமை, மத்திய வங்கி மற்றும் திணைக்கள அதிகாரிகளை மாற்றி வருவது, பௌத்த மதத்தின் தொன்மையை நிலைநிறுத்துவதற்காகப் பாதுகாப்பச் செயலர் மேயர் ஜெனரல் கமால் குணரத்ன தலைமையில் செயலணி அமைக்கப்பட்டது, கொவிட்-19 வேலைத் திட்டத்தில் இராணுவத்தைப் பயன்படுத்தி வெற்றி கண்டது, போதைப் பொருள் பாதாள உலகச் செயற்பாடுகளை முடக்குவது, நாட்டு மக்களுக்கான சகல அறிவித்தல்களும் ஜனாதிபதி செயலகத்திலிருந்து வெளியிடப்படுவது போன்ற செயற்பாடுகளால் போர்க் காலத்தில் அரசியல்வாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நீடித்த முரண்பாடுகள் சீர் செய்யப்பட்டன அல்லது சமப்படுத்தப்பட்டுள்ளன ஆகிய செயற்பாடுகளால் அரசியல்வாதிகளும் பொது நிர்வாகிகளும் பின்தள்ளப்பட்டனர்.

அரசியல்வாதிகளால் இந்த நாட்டைக் காப்பற்ற முடியாது இராணுவத்தால் மட்டுமே அது சாத்தியம் என்று சிங்கள மக்கள் மத்தியில் ஆழ ஊன்றப்பட்ட நம்பிக்கைக்கு ஏற்ப அதிபர் நடவடிக்கைகளை முன்நகர்த்துகிறார்.

2015ஆம் ஆண்டிலிருந்து ஜனாதிபதி மைத்திரி இருந்த இடத்துக்கு ஆளுமையுள்ள கோத்தாபய வந்து அமர்ந்ததும் கொவிட்-19 வேலைத் திட்டத்தில் எடுக்கப்பட்ட அதிரடி நடடிவடிக்கைகளும் அவர் எவ்வளவு தூரம் ஏனைய ஜனாதிபதிகளில் இருந்து வேறுபட்டுள்ளார் என்பதைச் சிங்கள - தமிழ் மக்கள் நன்கு உணர வழிவகுத்தது.

போதைக் கடத்தல்காரர்கள் சிறைக்குள்ளிருந்து செயற்படுவதில் கவனம் செலுத்தப்பட்டது, அவர்களுக்கு உதவிய சிறைச்சாலை அதிகாரிகளை மாற்றியது, போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் 17 பேர் கைது செய்யப்பட்டது, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் பற்றிய மீள் விசாரணை போன்ற அதிபர் முன்னெடுத்த பல விடயங்கள் பெரும்பான்மைச் சிங்கள மக்களைக் கவருவதாகவுள்ளன.

தற்போது கோத்தாபய ராஜபக்ச எங்காவது கூட்டங்களுக்குச் சென்றால் தான் பேசி முடிந்து புறப்படும்போது மக்களின் கோரிக்கைக் கடிதங்களைத் தானே தனது கைகளால் நேரடியாக வாங்குகிறார். அந்த மாவட்டத்திலுள்ள பெரிய விகாரைகளில் மாவட்டத்திலுள்ள

(22ஆம் பக்கம் பார்க்க)

உலக நோய் நிலைமை

மு. சிவநேசன்



வைரசுக்கள் எல்லாம்
கோவினயது கொண்டு
எழுகையிலே அம்பாளவள்
அடிதொழுது மச்சம்
மாமிசம் தவிர்த்து
பாட்டி வைத்தியத்தில்
பிழைத்துவந்த இனமன்றோ
வாழை யிலைப்
படுக்கை கொண்டு
வைரசைக் கையாண்டு
வெற்றிகொண்டு தப்பிவந்த
விவேகத்தமிழ் வரலாறன்றோ
ஒல்லாந்தப் படைகளுக்கு
ஆயிமாய் அம்மைகண்டு
செய்வதறியாது திகைத்ததோ
வரலாறாம் சுழிபுரத்தில்
பறளாய் அம்பாளே
அத்தனையும் சுகமாக்கி
ஆலயம் புதுப்பித்து
அவனே குடமுழுக்கு
கண்டதென்று வரலாறோ
காவியமோ பொய்க்கதையோ
கண்டதெல்லாம் தின்றின்று
நோய்க் காவிகளை
மலியப் பெற்று
கசாயங்கள் தனைமறந்து
நவீனமாம் சூப்குடித்து
வணங்கிய பாம்பையும்
விட்டுவிடாமல் வேகவைத்து
சமைத்துச் சாப்பிட்டு
சாபம் கொண்ட
கதை சொன்னால்
பரிகாசம் பண்ணுகிறார்
அந்த மரநிழலில்
இந்த விறகுவைத்து
இப்படிச் சமைத்துண்டு,
வாழும்வகை சொல்லித்தந்த
பாட்டியரும் போய்மறைந்தார்
தோசைக்கு தென்னோலை
பொச்சே அப்பம்சுட
எல்லாம் மறந்தாச்சு
இணையாக மரக்கறிகள்
முரண்படாது சமைத்துண்டு
பிணியின்றி வாழ்ந்தவினம்
பிணிமலிந்து மாய்வதேனோ
இன்று யாரறிவார்
முரண் தவிர்த்துக்
கூழ் காய்ச்சும்
வகை யறியார்
வேது பிடிக்கவும்
மூலிகை குளிக்கவும்
யார்சொல்லி தெரிவது
நாங்களே வேதுபிடித்து
நெபுலைசர் முன்னோடி
என்றுகூடத் தாமறியார்
மச்சமேமறுத்து உண்டாலும்
முரண்படா வகைதெரிந்து
நாளும்கோளும் பொருந்தவே
உண்டதைப் பழிப்பதுதகுமோ
உண்ணாமை வேண்டும்புலால்
பிறிதொன்றன் புண்ணென்றான்
இரண்டாயிரம் ஆண்டுகழிந்து
இப்போது மெய்யுணர்ந்து
இன்று தேடுகிறான்
விதைக்காமல் வளர்க்காமல்
திடீரென்று மரக்கறியை
அந்தமரம் வீட்டில்லை
இந்தமரம் வளர்க்காதே
இந்தமலர் இந்தப்பழம்
பூசைக்கும் ஆகாதென்ற
பக்குவங்கள் தமைமறந்தோம்
விஞ்ஞானம் கண்டுவிட்டோம்
உனக்கா காதென்றால்
கடவுளுக்கும் படைக்காதாகாப்
பக்குவங்கள் போய்மறைய
மெய்ஞ்ஞானம் தனைமறந்தோம்
செருக்கினை மனங்கொண்டோம்
இன்றைக்குஎல்லோரும்
தேடினும்கிடைக்காதே
இத்தனை பேருக்கும்
அத்தனைமூலிகைகள்
பாத்தீனியம் தான்மலிந்து
நோய்களை பரப்பிடுமே
மரங்களை வணங்கியவன்
மகத்தான நுட்பப்பேரறிவை
போற்றியவை காத்துவிட்ட
பக்குவத்தை பழிக்கலாமோ
படித்துவிட்டு மமதைகொண்டு
நூறாண்டில் கண்டதுகொண்டு
கோடியுகம் வாழ்ந்தவகை
மறந்துதான் போய்விட்டால்
பழையதெல்லாம் முடக்கிவைத்து
தடுப்பூசி பலபோட்டால்
கோடியாய் புதுவைரஸ்
தான் பிறந்துவந்து
மனிதகுலம் முழுவதையும்
கருவறுக்க மாட்டாதோ
வழிபாடு இறைபாடு
வாழ்க்கையை பழிப்பவரும்
பிள்ளைகுட்டி இல்லையென
நாகதோஷம் பரிகாரம்
கோவில் குளமென்று
நூல்கட்டித் திரிகின்றார்
எல்லாம் வாய்த்தவரோ
உலகத்தைக் காலடியில்
மிதிக்கவே வாழுகின்றார்
வௌவாலடித்து மருந்தில்லா
மரணங்களை வரலாறாய்
கண்டதும் அன்று
வௌவால் தின்றபாம்பை
உண்டு களித்திருந்து
விழிபிதுங்கி நின்றதின்று
எலிக்காய்ச்சல் என்கின்றார்
எலியையும் பிடித்துண்பார்
கிலிகொண்டு திரிகின்றார்
நோய்நொடிகள் வாட்டுகையில்
உடல்வருத்தி உளம்வருத்தி
இன்னதொழில் செய்பவனே
இன்னதைத் தின்றுவாழு
இன்னது பருகிவாழு
என்ற தத்துவத்தை
புரியாத கணனியுகம்
சும்மா இருந்துகொண்டு
கண்டதும் தின்னலாமோ
விண்டு எழுகின்ற
நோய்தன்னை மறைக்கலாமோ
மருந்து கொண்டு
இதில் சாதியில்லை
மதமு மில்லை
வாழும் வகையே
உனக்கு நன்மை
உண்பது வேதொழிலாய்
புலால் தேடியலைகின்ற
புன்மை மனிதர்களை
என்ன வென்பேன்
கொரானோ வைரசுக்கு
கசாயம் குடியென்று
நாட்டு வைத்தியரும்,
சொல்லிக் களைத்தாரே
நகைக்கின்றார் படித்தவரும்
அதனையே தானும்
கொரோனாக்கு மருந்தறியா
ஆங்கில மருத்துவரும்
அம்மா கொடுத்தால்
கசாயமே குடிக்கின்றார்,
குணங்குறிகள் கொண்டவனே
விழிபிதுங்கி சாகின்றாய்
கசாயத்தை குடிக்காமல்
வீணே சாகிறநீ
குடித்தாதல் சாகேன்நீ
நம்பாமல் சாகிறநீ
நம்பிவிட்டு சாகேன்
சாராயம் குடித்துச்
சாகிறநீ குடித்தால்
கசாயமென்ன கெட்டி
டுமா
நெட்டிருப்பு
பாரைக்கு
நெக்குவிடாப்
பாறை
பசுமரத்தின்
வேருக்கு
நெக்குவிடும்
கொரோனாவும்
வேழத்தில் பட்டுருவும்
கோல்பஞ்சில் பாயாதே
மனிதம் காத்து
மாற்றுயிரை மதித்து
மரமென்றாலும் மதித்து
வீணே மாய்க்காமல்
பேணி யுறவென்று
சுற்றமாய் கொண்டிங்கு
பணமோ துச்சமென்று
வாழ்ந்தாலே வாழ்வுண்டு
கோவிலுக்கும் போகவேண்டாம்
குளத்தில் குளித்தெழவேண்டாம்
மனிதம் பேணி
மற்றஉயிரெல்லாம்
மரமென்றாலும் தன்னுயிராய்
வீணேதறிக்காமல் விண்ணுலகும்
தொடவளர்த்து வகைதெரிந்து
வாழ்ந்துவிடு வையகத்தில்
வாழும்வகை தெரிந்துகொண்டு
வெளிநாடு வந்துவிட்டால்
தெய்வம் பொய்யல்ல,
பிறந்தமண் தூசமல்ல,
உணர்த்த வந்ததோ
உலகின் நோய்நிலமை,
மரக்கறி தேடுகிறார்
மஞ்சள் விலைவாசி
மருந்துக்கும் மேலாக
உலகத்தை முடக்கி
வீட்டில் சமையலாக்கி
வேலை பெரிதில்லை
பணமும் பொருட்டில்லை
பதவி மோகமேன்
இத்தனை ஆணவமேன்
வண்டி வாகனமேன்
அத்தனையும் உணரவைத்து
கால்நடையாய் கடைக்குப்போ
குடும்பமே இனியுலகம்
உயிரொன்றே போதும்
வேறெதுவும் வேண்டாம்
முகப்பூச்சு வேண்டாம்
முகக்கவசம் போதுமென்று
முகம்மூடித் திரிகின்ற
கொடுமைதனை என்னென்போம்
தெரிந்தவரோ தெரியாரோ
சிரிக்கிறாரோ முறைக்கிறாரோ
ஏதும் புரியவில்லை
கண்டுதான் போகிறாரோ
காணாமல் நடிக்கிறாரோ
கடன்தான் பட்டவரோ
கொடுத்தவருக்கு கொடுநோயோ
நேர்த்திகள் இப்படியோ
முகமூடி இல்லாமல்
வீரனாய் வலம்வருவார்
கிழிந்ததுணி கட்டிய
பகட்டில்லா பலருமேன்
சட்டை நிறத்தோடு
பொருந்த போடுவாரும்
தாடைக்கு கீழேதான்
தள்ளி விடுவாரும்

(21 பக்கம் பார்க்க)

மூளைக்கு வேலை!
முடிகிறதா பாருங்கள்!



வெற்றிடங்களை நிரப்புக?

போதைக் குற்றத்தின் பிறப்பிடமா யாழ். சிறைச்சாலை?

அஜய் அஜந்தன்

அண்மையில் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தில் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையின்போது போதைப் பொருளை வாங்குவதற்காக ஒரு வீட்டில் இருந்து மூன்று கப்பல் வாழைக் குலைகளை அவர்கள் திருடி விற்றது தெரியவந்தது. அதன் பின்னர் அந்த வாழைக் குலைகளைத் தேடிக் கண்டு பிடித்து பொலிஸார் கைப்பற்றியது வேறு கதை.

மற்றொரு சம்பவத்தில் வீதியில் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவரிடம் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடினார் ஓர் இளைஞர். அவரது மோட்டார் சைக்கிள் இலக்கத்தை நன்கு அவதானித்த அந்தப் பெண் காவல்துறையினரிடம் முறையிட, விரைந்து நடவடிக்கை எடுத்த காவல்துறையினர் மோட்டார் சைக்கிளுடன் சந்தேகநபரைக் கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையின்போது, வீட்டில் பணம் கொடுக்காததனால் போதைப் பொருள் வாங்குவதற்காக தங்கச் சங்கிலியைத் திருடினார் என்று ஒப்புக்கொண்டார்.

மூன்றாவது சம்பவத்தில் ஒரு தாயும் மகளும் கைகளில் வெட்டுக் காயங்களுடன் காவல் நிலையத்துக்கு வந்திருந்தனர். போதைப் பொருள் வாங்குவதற்குப் பணம் கொடுக்கவில்லை என்பதால் ஆத்திரமடைந்த தனது மகன் கத்தியை எடுத்து இந்தக் காயங்களை ஏற்படுத்தினார் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இதுபோன்று பலப் பல சம்பவங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இடம்பெறுகின்றன. அண்மைக் காலமாக குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்கிற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட பலரிடம் இருந்தும் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டிருக்கின்றது என்கிறார்கள் குற்றத் தடுப்புக் காவல்துறையினர்.

இவர்கள் எப்படிப் போதைப் பொருள் பயன்பாட்டுக்கு அடிமையானார்கள் என்று கேட்டால், காவலர்கள் கூறும் காரணம் அதிர்ச்சியளிப்பதாக இருக்கின்றது.

ஏற்கனவே சிறு குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது சிறைச்சாலைக்கு உள்ளேயே தாம் போதைப் பாவனைக்குப் பழக்கமானார்கள் என்று அவர்கள் காவல்துறையினரிடம் தெரிவித்துள்ளனர்.

சிறையில் அவர்களுக்கு இலவசமாகக் கிடைக்கும் போதைப் பொருளை வெளியே வந்ததும் பணம் கொடுத்து வாங்க வேண்டியிருப்பதால் திருட்டு, வழிப்பறி; கொள்ளை போன்றவற்றில் இவர்கள் ஈடுபடுகிறார்கள் என்று காவல் துறையினர் தெரிவிக்கின்றனர்.

இதில் இன்னும் மேசமானது என்னவென்றால், வாள் வெட்டு மற்றும் கும்பல் சண்டையில் ஈடுபடும் இளைஞர்களைச் சந்தேகத்தில் கைது செய்து சிறையில் விளக்கமறியலில் வைக்கும் போது அவர்களுக்கும் இவ்வாறு போதைப் பொருள் பழக்கம் ஏற்படுத்தப்பட்டு விடுகின்றது. அத்தகைய இளைஞர்கள் பின்னர் திருட்டு, கொள்ளை, வழிப்பறிக் குற்றங்களில் ஈடுபட்டுக் கைது செய்யப்படும்போது போதைக்கு அவர்கள் அடிமையாகி இருப்பதைத் தாம் கண்டுள்ளனர் என்றும் போதைப்பொருள் வாங்குவதற்காகவே அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்றும் காவலர்கள் தெரிவிக்கின்றனர்.

(22ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

கிருபா லேனர்ஸ்

கிருபா லேனர்ஸ் KIRUBAA LEARNERS

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

அரச அங்கீகாரம் பெற்ற கனரக
(A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

செஞ்சொற்செல்வர்
ஆறு திருமுருகன்
எழுதும்

சமயத் தொடர்

தெய்வ சக்தி வாய்ந்த மருந்து

திருநீறு

சைவ மக்களின் வழிபாட்டு மரபில் திருநீறு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சரீரத்தின் பாதுகாப்புக் கவசமாக இறை நாமத்தை உச்சரித்து முன்னோர் திருநீற்றை அணிவார்கள். திரு நீற்றை விபூதி என்றும் அழைப்பார்கள்.

திருநீறு மருந்து என்பதை இன்றைய தலை முறை அறிவதில்லை.

பசுவின் சாணகத்திலிருந்தே விபூதி தயாரிக் கப்படுகிறது. இயற்கைப் புல் தாவரங்களை உண்ணும் பசுவின் பால் மனிதர்களின் ஆரோக்கி யத்தில் எப்படி முக்கியத்துவம் பெறுகிறதோ, அதேயளவுக்கு பசுவின் சாணியை நெருப்பில் சுட்டு நீறாக்கிப் பெறப்படும் திருநீறும் முக்கியத்து வம் வாய்ந்தது.

எமது சரீரத்துக்கு ஆபத்து வராது காப்பதற்கான ஒரு தொற்றுநீக்கியாகவும் திருநீறு பயன்படுத் தப்படும் என்ற உண்மையை நாம் அறிய வேண்டும்.

சுத்தமான விபூதியை ஒளட தமாக வாயில் போட்டு உண்ணும் பாரம்பரியமும் உண்டு. தெய்வ சக்தி வாய்ந்த மருந்தாக திரு நீற்றை எம் முன்னோர்கள் போற்றினர்.

திருநீற்றின் திருவருட் சக்தியை ஞானிகள், மகான்கள் காலத்துக்குக் காலம் நன்கு எடுத்துரைத்தனர். "நீறில்லா நெற்றி பாழ்" என்று ஔவைப் பிராட்டி சொன்ன வார்த்தையில் நிறைந்த பொருளுண்டு. திருநீற்றின் மகி மையை நாம் உணர்ந்து தரித்து நன்மை பெறவேண்டும்.

திருநீற்றின் சிறப்பை ஞானசம் பந்தப் பெருமான் திருநீற்றுப் பதி கம்பாடி மேன்மைப் படுத்தியுள் ளார். மந்திரமாவது நீறு எனத் தொடங்கி நீற்றின் சக்தியை நன்கு வெளிப்படுத்தி யுள்ளார். மந்திரம் என்பது மண்+திறம் மந்திரம்.

மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை மூன்றையும் சாம்பலாக்கி நீறு உருவாகிறது. வெண்மையான நீறு மாசற்ற எண்ணத்தை உரு வாக்கும் என அழகாகக் குறிப்பிடு கிறார்.

எந்தவொரு பொருளும் இறுதியில் மண்ணோடு

(22ஆம் பக்கம் பார்க்க)

உங்களின் தேவைக்கு
நீங்களே பயிரிடுங்கள்!

வீட்டுத்தோட்டத்திற்கு
தேவையான கத்தரி, தக்காளி,
மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு.

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான
விதைகளும் விற்பனைக்கு உண்டு.
வெண்டி - பால்வெண்டி 10கிராம் 150/=
பயிற்றங்காய் - குறுங்குவால் 10கிராம் 100/=
கத்தரி - திருநெல்வேலி ஊதா 10கிராம் 150/=
கீரை 30 - 40கிராம் 100/=
தக்காளி 4கிராம் 200/=
பாகற்காய் - திருநெல்வேலி 10கிராம் 200/=
பச்சைமிளகாய் 5கிராம் 100/=
சோளம் 50கிராம் 120/=
பூசணி 20விதை 200/=
முள்ளங்கி 10கிராம் 100/=
பீற்ரூட் 10கிராம் 150/=
முருங்கை - PKM1 15விதை 250/=

வீட்டில் போதிய இடம்
இல்லாதவர்களுக்கு Grow Bag
வசதி மூலம் மரக்கறிக் கன்றுகள்
விநியோகிக்கப்படும்.

மிளகாய் - 200/=
கத்தரி - 250/=
தக்காளி - 250/=
வெண்டி - 250/=

இயற்கையான
முறையில்
தயாரிக்கப்பட்ட
பசளைகள் மற்றும்
பூச்சிச் கொல்லிகள்
என்பனவும்
பெற்றுக்கொள்ளலாம்.





யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்படும்.

உங்களின் வீடுகளிற்கு விநியோகிக்கப்படும்.

விநியோக கட்டணம் -
யாழ் மாநகர எல்லை - 50/=
வலிகாமம் - 100/=
தென்மராட்சி - 150/=
வடமராட்சி - 200/=
தீவகம் - 250/=

இலங்கை முழுவதும் தபால்
மூலமாகவும் விதைகள்
அனுப்பி வைக்கப்படும்

தொடர்புகளுக்கு: - 077 411 4422
shop.semba.lk

மீண்டும் கிடைக்குமா நாவலர் பண்ணை?

ஜெரா

வவுனியா வடக்கு என்றால் அனேகம் பேர், அது எங்கை இருக்கு என்றுதான் கேட்பர். நெடுங்கேணி என்ற பெயரே வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் - பிரதேச சபைப் பிரிவின் பிரதான அடையாளமாக மாறியிருக்கிறது.

நெடுங்கேணி, ஒரு சிறு நகரம். விவசாயம்தாண்டி எத்தொழிலையும் தெரியாத கிராமங்களையும், குளங்களையும், இருளடர்ந்த மணலாற்றுக் காட்டின் இடைப் பாகத்தையும் தனக்குள் வைத்திருக்கிறது இவ்வூர். ஒரு காலத்தில் இங்கு காட்டிறைச்சியும், வற்றலும் புகையிலையும் மிகப் பிரபலம்.

எல்லைக் கிராமங்கள்

இத்தகைய வளநிலத்தின் துயரம் என்னவெனில், தமிழர் மரபு வழித் தாயகப் பிரதேசத்தின் எல்லையாக அமைந்துவிட்டமைதான். வடமத்திய மாகாணத்தின் அனுராதபுர மாவட்டத்தையும், வட மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தையும் நிர்வாகவியல் ரீதியில் பிரிக்கின்ற எல்லைப் பகுதியில் நெடுங்கேணியும், அதனுள்ளடங்கிய கிராமங்களும் இருக்கின்றன.

இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் அனுராதபுரத்திலிருந்து படர்ந்த சிங்களமயமாக்கத்தை முதலில் எதிர்கொண்ட கிராமங்களாக இவை இருந்தன. ஆக, இன முரனைக் கூர்மைப்படுத்திய திட்டமிட்ட குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்திய வலயமாக இக்கிராமங்கள் இருந்தன.

நாவலர் பண்ணை

நெடுங்கேணி சந்தி தொடக்கம் ஊஞ்சால்கட்டி கிராமம் வரை 30க்கும் மேற்பட்ட பாரம்பரிய தமிழ் கிராமங்கள் பரந்திருப்பினும், இக்கிராமங்களின் எல்லையாகக் காஞ்சூரமோட்டை, நாவலர் பண்ணை, டொலர்பாம், ஹென்ட்பாம், சிலோன் தியேட்டர், தனிக்கல்லு எனப் பல விவசாயப் பெருநிலங்கள் இருந்தன.

ஆயுதப் போராட்டத்தின்போது போரேந்து நிலமாகக் காணப்பட்ட இப்பகுதிகளிலிருந்து தமிழர்கள் வெளியேறி வேறிடங்களுக்குச் சென்றுவிட அவை சிங்களக் குடியேற்றங்களால் இன்று நிரம்பிவிட்டன. தமிழ் கிராமங்களது பெயர்கள் சிங்களத்துக்கு மாற்றப்பட்டுவிட்டன. இக்குடியேற்றங்களிலிருந்து தப்பித்தவை அடர்வனமாகிவிட்டன.





நிலமீட்புப் போராட்டம்

2009இல் போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து இக்கிராமங்களிலிருந்து வெளியேறி இந்தியாவிலும், நாட்டின் பிற மாவட்டங்களிலும் தங்கியிருந்த மக்கள் மீள்குடியேற வந்தனர். தம் பழைய காணிகளின் அனுமதிப் பத்திரங்களுடன் வந்தவர்களுக்கு வனபரிபாலனத் திணைக்களம் தூக்கிப்போட்ட 2012ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் அதிர்ச்சியளித்தது.

அந்த வர்த்தமானி அறிவித்தலின் படி தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த கிராமங்கள் பாதுகாக்கப்பட்ட வனமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தன. போர்க் காலத்தில் வனமாக மாறியிருந்த கிராமத்தை முழுமையாகத் தன் அதிகாரத்துக்குள் எடுத்திருந்தது அத் திணைக்களம்.

"இங்க எல்லாம் வன வளத் திணைக்கள அதிகாரிகள் வரவே இல்ல. கூகிள் மப்ல பார்த்து கெசற் பண்ணியிருக்காங்க. இடம்பெயர முதல் இங்க 300 தொடக்கம் 350 வரைக்கும் குடும்பங்கள் இருந்திருக்கு. இப்ப இந்தியாவிலயிருந்து வந்த 22 குடும்பங்களும், வெளி மாவட்டங்களிலிருந்து 20 குடும்பங்களுமாக மொத்தம் 42 குடும்பத்தவர் இருக்கிறம். எங்கட காணிகளுக்குள்ள போக அனுமதிக்கிறாங்க இல்ல. நாங்கள் அங்க வாழ்ந்ததுக்கான கட்டடங்கள், இப்பவும் காட்டுக்குள்ள இருக்கு. 1980ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட றோட்டு இருக்கு..." - எனக் குறிப்பிடும் அக்கிராமத்தின் அபிவிருத்திக் குழு செயலாளரான சு.தியாகராஜாவிடம்

"இதை மீட்க என்ன நடவடிக்கைகள் எடுத்தீர்கள் எனக் கேட்டால்..."

"எல்லா அதிகாரிகளிடமும் பேசிப் பார்த்து சரிவரேல்ல. போனகிழமை போராட்டம் நடத்தினம். அரசியல்வாதிகளோ, அதிகாரிகளோ வரல்ல. ஆனால் சிங்கள ஆக்கள் எங்கட கிராமத்தின்ர மற்றப்பக்கமா வேகமாகப் பிடிச்சிக்கொண்டு. வாறாங்கள். எங்களுக்குத்தான் ஆதரவா நிற்க யாருமில்லையே..!" என நிர்க்கதியான நிலையை தன் உடற்சைகையால் வெளிப்படுத்துகிறார். ■

கடவுள் வருகிறார்

கடவுள் வருகிறார்
ஒரு கையால் உலகை முடக்கி
மறு கையால் உலகை படைத்தபடி

கடவுள் வருகிறார்
பெரு நகரங்களை
பறவைகளின் ஒலிகளால்
மூழ்கடித்த படி
துவைத்து காயப்போட்ட வேட்டியென
பூமியை சூழவும் காற்றை
ஆனந்தமாய் அசைந்தாட வைத்தபடி
இரைச்சலுறு அம்புகளால்
இடையறாது துளைபடாது
மேகங்களை மிதக்கவிட்டு
நத்தையாய் ஊர்ந்த நதிகளை
மான் கிளைகளாய் துள்ளிக் குதித்து

பாய்ந்தோட வைத்தபடி
காடுகளில் மிருகங்களை
களியாட்டம் போட வைத்து
அதிவேக நெடுஞ்சாலையில்
மயில்களை தோகைவித்தாடவிட்டு
இருநூறு கிலோ மீற்றர் தொலைவு
இமய மலைத் தொடரை
இங்கு காட்சி கொடுக்க வைத்து
மானுட குலத்தையே
ஓய்வாக இருக்கப் பண்ணி

கடவுள் வருகிறார்...
இல்லையென்றால்,

கோடானு கோடி வாகனங்களை
ஒன்றாக நிறுத்திக் காட்டுங்கள்
ஆயிரம் ஆயிரம் விமானங்களை
ஒன்றாக இறக்கி நிறுத்துங்கள்
பண வெறியில்
பெரு மிருகங்களாய்
மூச்சிரைத்தபடி முடிவற்று உறுமும்
ஆலைகள் அனைத்தையும்
செயலிழக்க வையுங்கள்
ஆயுத களஞ்சியத்தின் முன்
மனிதனை கைபிசைய வையுங்கள்
மண்ணையும் மழையையும்
கண்ணாக்கிக் காட்டுங்கள்
மானுட குலத்தின் ஓட்டத்தை
ஒருமுறை நிறுத்துங்கள்

கடவுள்தானே வருகிறார்?
இந்த வீட்டின் சொந்தக்காரர் அவர்
ஒழுங்குபடுத்த வருகிறார்
இதன் ஆதி முகத்தை அவரே அறிவார்
வாடகை வாசிகளா அறிவர்
கடவுள்தான் வருகிறார்
இப்படியெல்லாம்தான் அவர் வருவார்

– வாசுதேவன்

உண்மை சுடும்

● மிருசுவில் தமிழ்தாசன்

சிறுப்பு நிற ஜீன்ஸ். கட்டம் போட்ட ஷேர்ட். நிலைக் கண்ணாடியில் தன்னழகைப் பார்த்து இரசித்துக் கொண்டேயிருந்தான் தீபன். என்ன நினைத்தானோ! ஒழுங்காக வாரியிழுத்த கேசத்தைக் கைகளால் கோதிக் கலைத்துவிட்டு, மீண்டும் கண்ணாடியில் தன்னழகை மீள்பரிசீலனை செய்தான். இப்போது கொஞ்சம் திருப்தி. கொஞ்சம் திருப்தியின்மை. அடுத்து முகப்பவுடரைக் கொஞ்ச மாகக் கொட்டி அதில் சிறிதளவை விரலால் தொட்டு நெற்றியில் ஒரு சிறு தடவல். அவசரமாக ஓடிச் சென்று அந்தப் புத்தம் புதிய 'பல்சர்' ரக மோட்டர் சைக்கிளில் பாய்ந்தேறினான்.

"துலைக்கே போறாய்? றோட்டு வழிய எங்க பார்த்தாலும் ஒரே அக்சிடென்ராய்க் கிடக்கு. பார்த்துக் கவனமாய்ப் போயிற்று வா தம்பி! வேகமாய் ஓடக் கூடாது. மெதுவாய்ப் போயிற்று வா"

தஞ்சமென்று தனது ஓய்வுக் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார் அவர். அன்றாடம் பத்திரிகைகளைப் படிப்பதும் தனது மூன்று பிள்ளைகட்கும் அவ்வப்போது எச்சரிக்கையுடன் அறிவுரைகள் வழங்குவதுமே அவரின் கடமை யாய் இருந்தது.

தீபனுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் அரச அலுவலகத்தில் வேலை. தினமும் பஸ்சில்தான் பயணம் செய்வான். இன்று விடுமுறை தினமென்பதால்

"நான் சொன்ன பொது அறிவுக் கேள்விகள்தான் இன்ரர்வியூவிலை கேட்பா ங்கள். நல்லாய்ப் படிச்சு ஆயத்தமாகிக் கொண்டுபோ! கவனக் குறைவாயிருந்து குண்டடிச்சுப்போட்டு வந்து அழுது குளறாதை"

மகள் தமயந்திக்கு வங்கி உத்தி யோகத்துக்கான பரீட்சையாம்! அவள் அவசர அவசரமாகப் புறப்படும்போது அன்புத் தந்தை அக்கறையுடன் விடுத்த அறிவுரைதானிது.

நீண்ட நாள்களுக்குப் பின்பு மின்னாமல் முழங்காமல் வந்த கோடை மழை, சோவென்று கொட்டித் தீர்த்தது. முற்றத்தில் மழைநீர் வெள்ளமாகத் தேங்கி நின்றது. இப்படியொரு மழை பெய்யும் என்று யார்தான் நினைத்திருந்தார்கள்?

"எனேய் சரசு! முத்தத்தில வெள்ளம் நிண்டு ஒரே சேறும் சகதியுமாக் கிடக்குது. வழுக்கும்போல கவனம். இப்ப நானும் ஒருக்கா விழுந்து போகப் பாத்தன். ஆரெண்டாலும் கவனமாய் நடவுங்கோ! பேந்து கவனமில்லாமல் விழுந்து முறிஞ்சு போட்டு நிண்டு கரைச்சல் படாதேயுங்கோ"

சொல்லியபடியே பத்திரி கையின் மற்றைய பக்கத்தைப் புரட்டிக் கொண்டிருந்தார் அரு ளம்பலம் மாஸ்ரர்.

"ஐயோ! என்ர கதிர்காமக் கந்தா! சேறு வழுக்கிப்போட்டுது! ஐயோ! விழுந்து போனன் எல்லே! காலுக்கை சுளுக்கிப்போட்டுது. ஓடி வாருங்கோப்பா! என்னைத் தூக்கி விடுங்கோ!''

சேற்றில் வழுக்கி விழுந்த சரஸ்வதி ஈனஸ்வரத்தில் முனகிக் கொண்டிருந்தாள்.

"பாரப்பா இந்த நாசமறுந்த மனிசனை! உந்த மனிசன்ரை வாயிலை ஒரு நல்ல வார்த்தையும் வராது! என்ன சொன்னாலும் அது அப்படியே பலிக்கும்! இப்ப பார் சொல்லி வாய் மூட முன்னமே அது அப்பிடியே பலிச்சிட்டுது. உன்ரை நாக்கிலை கறுப்பு மச்சம் கிடக்குதோ." காட்டுக் கத்தல் கத்தினாள் மனைவி சரஸ்வதி.

தாயாரின் கூக்குரல் கேட்டதும் என்னவோ ஏதோ என்று பதறியபடி பிள்ளைகள் சம்பவ இடத்துக்கு ஓடோடி வந்தனர்.

"ஓமம்மா! அப்பாவின்ர வாயால வாறதெல்லாம் அப்பிடியே பலிக்குது. அண்டைக்கு நான் மோட்டச் சைக்கிளை எடுத்துக் கொண்டு போகைக்குள்ளை ஏதோ எல்லாம் சொன்னார். அவர் சொன்னது மாதிரியே நான் அக்சிடென்ற்பட்டு ஆஸ்பத்திரியிலை கிடந்து வந்து நிற்கிறன். தங்கச்சி இன்ரர் வியூவுக்குப் போற நேரம் பார்த்து ஏதோ பெரிய எச்சரிக்கையளைக் குடுத்து விட்டார். கடைசியிலை அவளுக்கு என்ன நடந்தது. இன்ரர்வியூவிலை ஃபெயில். உண்மையிலை அப்பாவின்ர நாக்குக் கரி நாக்குத்தான்!''

தாயாருக்கு உதவியாக நின்று பக்கவாத்தியம் வாசித்தான் இரண்டாவது மகன்!

அருளம்பலம் மாஸ்ரருக்குச் சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை. நெருப்புச் சுடும் என்று சொன்ன பின்னாலும் நெருப்பில் கையை வைத்துச் சூடு வாங்கி வந்துவிட்டுப் புத்தி மதி கூறியவர் மீது கோபிப்பதில் என்ன நியாயம்? ■

சாய்மனைக் கட்டிலில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்த அருளம்பலம் மாஸ்ரர் மிகவும் கரிசனையுடன் மகன் தீபனுக்கு அறிவுறுத்தல் வழங்கினார். அவர் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சுமார் ஐந்து ஆண்டுகளாகின்றன. அந்தச் சாய்மனைக் கட்டிலே

ஆசை அருமையாக மோட்டார் சைக்கிளை எடுக்கும்போதே தந்தையின் முணுமுணுப்பு அவனை என்னவோ செய்தது.

"சே! மனிசர் ஒரு விசயத்துக்கு வெளிக்கிடயுக்கையே நச்சுப் பல்லி மாதிரி! வர வர அப்பா வலுத்த மோசம்" எரிச்சல்பட் டான்.

தமிழர்கள் தம் தலையில் தூக்கிவைத்து கொண்டாடும் தலைவர் எவரேனும் உண்டா?

● தர்மராசா

சிங்களவர் மத்தியில் சாதாரண கூலி வேலை செய்பவர்கள் தொடக்கம் உயர் நிலையில் உள்ளவர்கள் வரை மகிந்த ராஜபக்சவை 'மகிந்த மாத்தையா' என்று விளிப்பதும் ரணில் விக்கிரமசிங்கவை 'ரணில்' என்று அழைப்பதும் எப்போதுமே காணக்கூடியது. நீண்ட போர் ஒன்றிலிருந்து தமது இனத்தைக் காப்பாற்றியவர் மகிந்த என்ற பெருமதிப்பு சிங்கள மக்கள் மத்தியில் காணப்படுவதே இதற்குக் காரணம்.

மன்னர்கள் காலத்திலிருந்து பார்த்தால் துட்டகைமுனு, மகா பராக்கிரமபாகு போன்ற மன்னர்களுக்குக் கொடுத்த மரியாதையைக் கண்டியின் இறுதி மன்னனான ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கு சிங்களவர்கள் கொடுக்கவில்லை. அதாவது வீரியம்மிக்க சிங்களத் தலைவர்களை மட்டுமே போற்றுகின்ற நிலையைச் சிங்கள மக்கள் தொடர்கின்றார்கள். அநகாரிக தர்மபால, டி.எஸ்.சேனநாயக்கா, பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாச, மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச என அந்தப் பட்டியல் நீள்கின்றது.

இந்தத் தலைவர்கள் சிங்கள இனத்துக்குக் கொடுத்த முக்கியத்து வத்தாலும் சேவையாலும் அர்ப்பணிப்பாலும் ஏற்படுத்தப்பட்டதே இந்த மதிப்பு.

இத்தகைய மதிப்பு வாய்ந்த தலைவர் ஒருவராவது தமிழர்களிடம் இருக்கிறாரா? ஒருவர் இருந்தார் அவர் இப்போது இல்லை. தமிழர்கள் தமது தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடக்கூடிய 'மென்வலு' தலைவர் யாராவது இருக்கிறாரா?

இனத்துக்காகச் சாதித்தவர்கள் என்கிற வரிசையில் தமிழ் மக்களின் மனங்களைக் கொள்ளை கொண்ட தலைவராக நாடாளுமன்றத் தேர்தல் அரசியலுக்கு வந்த எவரும் முக்கியத்துவம் பெறவில்லை.

தமிழ்த் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு எதைச் செய்தார்கள் என்று பாத்தால் சிங்களத் தலைவர்களைக் கெட்டவர்களாகக் காண்பித்துத் தமிழ் மக்களை உசுப்பேற்றி அல்லது உணர்ச்சி வசப்படுத்தி வாக்குகளைப் பெற்று நாடாளு மன்றத்துக்குச் சென்றார்கள் என்பதற்கு மேல் அவர்கள் இதுவரையில் சாதித்தவை கள் என்று எவையும் இல்லை.

பேரினவாதத்தால் ஒடுக்கப்படும் ஒரு சிறுபான்மை இனத்தின் தலைவர்கள் தாங்கள் என்று நினைத்துத் தமது மக்க ளுக்கு எத்தகைய சேவைகளை ஆற்ற முடியும் என்பதில் தமிழ்த் தலைவர்கள் கவனம் செலுத்தவில்லை. தற்போதுகூட 'மகிந்த குடும்பத் துக்குள் குழப்பம்', 'இலங்கை ஆட்சியாளர்களை வீழ்த்து வோம்' என்றே தமிழ்த் தலைவர்கள் தமது மக்கள் மத்தியில் உரையாற்றுகின்றனர்.

நடக்கவுள்ள தேர்தலில் இந்த நோய் இன்னும் முற்றிப்போயுள்ளது. ஒரே கட்சியில் இருந்தவர்களே வேறாகி, சிதறி நின்று ஒருவரையொருவர் விமர்சிக்கின்ற னர். ஒருவரை ஒருவர் தோற்கடிப்ப தற்காகப் பணியாற்றுகின்றனர். தவிர, தாம் தமிழ் மக்களுக்கு ஆக்கபூர்வமாக எதைச் செய்ய விருக்கின்றனர் என்பதைப் பற்றி அவர்கள் இந்தத் தேர்தலில் இன்னும் எதையும் கூறவில்லை.

தமிழர் அரசியலில் இருந்த மிகப் பெரிய குறைபாடு ஆங்கிலம் கற்ற

மேட்டுக்குடி மக்கள் அரசியல் தலைவர்களாக மாறியமையே ஆகும். இவர்கள் ஏற்கனவே போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு விசுவாசமாக நடந்து அவர்களின் சன்மானங்களைப் பெற்றவர்கள் வழி வந்தவர்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

கொழும்பு 7இல் வீடுகளும் சொத்துகளும் வைத்திருப்பவர்கள். யாழ்ப்பாணத்தில் தோட்டம் செய்தோ, அல்லது வேறு தொழில்கள் புரிந்தோ உழைத்துப் பிழைக்கும் மக்களின் துன்ப துயரங்க ளைத் தெரிந்து கொள்ளாதவர்கள்.

இந்த மேட்டுக்குடி அரசியல் சாதாரண தமிழ் மக்களின் தேவைகளைத் தொடவில்லை. வாக்கு அறு வடைக்காகத் தமிழீழம், அரசியல் தீர்வு போன்ற விடயங்களைத் தமிழர் மத்தியில் விதைத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார்கள். இவ்வாறான தமிழ்த் தலைவர்கள் தாம் சாகும் வரை அரசியலில் தொடர்ந்து இருக்க வேண்டும் என நினைப்ப தால் கட்சிகளுக்குள் ஜனநாயகமோ, இளை யோருக்கான விட்டுக்கொடுப்போ இல்லாது போய்விட்டது. குறைந்த பட்சம் எந்தத் தமிழ்க் கட்சியிடமும் நிரந்தரமான ஒரு தலைமைச் செயலகம்கூட இல்லை என்பதே இவர்கள் மக்கள் மத்தியில் எவ்வளவு ஆழமாக வேரூன்றி இருக் கிறார்கள் என்பதை அறிவதற்குப் போது மானது.

இறுதிப் போர் முடிந்து 11ஆண்டுகள் கழிந்த பின்பும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு உள்ள மதிப்பு பொது மக்கள் மத்தியில் எந்தவிதத்திலும் குறைந்துவிட வில்லை. சிங்களவர்க ளுக்குப் பிரபாகரனைப் பிடிக்காது என்பது அவர் தமிழ் மக்க ளுக்காகப் போராடிய ஒரே தன்னலமற்ற தலைவர் என்பதால் தான். அதுபோல தமி ழர்களுக்கு அவரைப் பிடிக்கும் ஏனெனில் அவர் தமிழர்க ளுக்காகப் போராடினார் என்பதால். தற்போதைய தமிழ்த் தலைவர்களோ சிங்களத் தலைவர்களே மெச்சிப் பாராட்டுகின்ற நிலையில் உள்ளனர் என்பதைக் காணும்போதே அவர்கள் தமிழர்களுக்கு என்ன செய்திருப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இந்த நிலமை தமிழ் மக்களுக்கு நன்மை பயக் கப்போவதில்லை.

தமிழ் உயர் வர்க்கத்தில் பெரும்பான் மையானோருக்குப் பிரபாகரனைப் பிடிப்பதில்லை. 1983 – 2009 காலத்தில் அவர்கள் அரசியலுக்குள்

(12ஆம் பக்கம் பார்க்க)

மூளைக்கு வேலை! முடிகிறதா பாருங்கள்!

3

இந்தப் படத்தில் எத்தனை சதுரங்கள் உள்ளன.



திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கும் கீழடி குழந்தைகள்



● சரத் சந்தர்

தமிழர்களின் தொல் பெருமையை உலகிற்குப் பறைசாற்றி வரும் தமிழகத்தின் கீழடியில் தற்போது 6ஆம் கட்ட அகழ்வாராய்ச்சி மிகவும் தீவிரமாக நடந்து வருகிறது.

பல்வேறு அழுத்தங்களுக்குப் பிறகு தொடங்கப்பட்ட இந்த 6ஆம் கட்ட ஆராய்ச்சியில் பல எதிர்பாராத திருப்பங்கள் நடந்தேறியுள்ளன.

தற்பொழுது இந்த ஆராய்ச்சியில் பெரிய தலையுடன் இரண்டு ஆதிகால எலும் புக்கூடுகள் கிடைத்துள்ளன. இன்னும் பல மர்ம முடிச்சுகள் இந்த 6ஆம் கட்ட அகழ்வாராய்ச்சியில் வெளி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்திலிருந்து சுமார் 15 கிலோ மீற்றர் தூரத்தில் தென்கிழக்கில் அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில்தான் கீழடி கிராமம் அமைத்திருக்கிறது. இங்குதான் தற்பொழுது 6ஆம் கட்ட அகழ்வாராய்ச்சி நடைபெற்றுவரு கிறது. இந்த ஆராய்ச்சியில் சுமார் 2ஆயிரத்து 600 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரிய பொருள் கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது முழுக்க முழுக்க தமிழர் நாகரீகம் என்று ஆய்வாளர்கள் அடித்துச் சொல்கிறார்கள்.

உலகையே வியப்பில் ஆழ்த்தியுள்ள இந்தக் கீழடி அகழ்வாராய்ச்சியில் தற்பொழுது இரண்டு குழந்தைகளின் எலும்புப் படிமங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு உடல்க ளும் அடுத்த க ட் ட ஆய்வுக்காக மதுரை காமராஜர் பல்கலைக்கழ கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு உடல்களும் குழந்தைகளின் உடல்கள்தான் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. 95 செ.மீ. நீளம் கொண்ட மனித உடல் படிமங்கள் கீழடியில் இதற்கு முன்பும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் அது பெரியவர்களின் உடல் படிமங்கள். இந்தப் பகுதியில் இதுவரை மொத்தமாக மூன்று முழுமையான மனிதப் படிமங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதில் சுவாரசியம் என்னவென்றால் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு உடல்க ளில் ஒரு உடல் 95 செ.மீ. நீளம் கொண்டது மற்றொரு உடல் 75 செ.மீ. நீளம் கொண்டது. இந்த இரண்டு உடல்களையும் வைத்துத் தீவிரமான ஆராய்ச்சிகள் நடந்து வருகின் றன.

இந்த குழந்தை எலும்புப் படிமத்திலும் சில சுவாரசி யமான தகவல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகளின் படிமங்க ளில் தலைகள் மட்டும் இயல்பைவிடப் பெரிதாக இருக்கின்றன. உடலின் மற்றப் பகுதிகள் எப்பொழுதும் போல சாதாரணமாக இருக்கின்றன.

இந்தக் குழந்தைகளின் தலைப் பகுதி மட்டும் ஏன் பெரியதாக இருக்கிறது என்பதற்கான சரியான காரணம் எதுவும் இன்னும் கண்டுபிடிக் கப்படவில்லை.

சந்தேகத்தில் ஆராய்ச்சியாளர்கள் இருப்பினும் நீண்டகாலமாக மண்ணில் புதையுண்டுள்ள படிமங் களில் இப்படியான சில மாற்றங்கள் ஏற்பட்டிருக் கக்கூடும் என்று கருதுகின்றார்கள்.

உண்மையைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கண்டுபிடிக்கப்பட்ட குழந்தைகளின் வயது மற்றும் பாலினம் குறித்த தகவல்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. இது எத்தனை ஆண்டு கள் பழமையானது என்பது இன்னும் சில ஆராய்ச்சிகளுக்குப் பின்னர் தெரியவரும். இவற் றின் நிலையை வைத்துப் பார்க்கையில் இவை நிச்சயமாக கி.மு 6ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய உடல்களாகத் தான் இருக்கக்கூடும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கீழடி ஆராய்ச்சியில் இந்த இரண்டு குழந்தை களின் உடல்களும் முக்கியமான திருப்பு முனையாக அமையும் என்று எதிர்பார்க்க ப்படு கிறது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் இந்திய வரலாற்றையே மாற்றி எழுதும் அளவிற் குப் பழமையானவை என்பது உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. ■

மூளைக்கு வேலை!
முடிகிறதா பாருங்கள்!



இந்தப் பேருந்து எந்தப் பக்கமாகப் போகிறது?

4

தமிழர்கள் தலையில்...

நுழையமுடியாத நிலை காணப்பட்டதால்,

புலிகள் அழிக்கப்பட்டதும் அழித்தவர் களுக்கு நன்றி கூறும் நிலையிலேயே இருந்தார்கள். இது பொதுவான ஏழைத் தமிழ் மக்களின் மனநிலையிலிருந்து வேறுபட்டது.

சிங்களத் தலைவர்களைச் சிங்கள மக்களில் பலரும் மதிப்பதற்கு ஒப்பான நிலை தமிழ் மக்களிடம் பிரபாகரனுக்கு மட்டுமே இருந்தது. அவர் தேர்தல் அரசியலுக்குப் போகவில்லை. அரசின் சலுகை களுக்காகத் தமிழ் மக்களைப் புறம் தள்ளவில்லை கொழும்பு நோக்கிப் பாயும் ஈர்ப்பும் அவரிடம் இருக்க வில்லை.

இறுதிப் போரில் அவர் தனது ஒட்டுமொத்தக் குடும்பத்தை யும் இழக்கும் அளவுக்கு அவரது அரப்பணிப்பு இருந்திருக்கிறது. இதுவே அவர் இன்றுவரை மக்க ளால் மதிக்கப்படு வதற்குக் காரண மாகும்.

தமிழ்த் தலைவர்களில் பலர் உயிருடன் இருக்கும்போதே மக்களின் திட்ட லுக்கும், தூற்றுதலுக்கும் செருப்படிக்கும் உருவப் பொம்மை எரிப்பிற்கும் உள்ளாகி யிருக்கி றார்கள். அவர்கள் தமிழ் மக்களை விட்டு வெகு தூரத்திற்கு அந்நியப்பட்டி ருப்பதையே இது காட்டுகிறது. ஒரு தலைவருக்கு உரிய மதிப்பு என்பது அவர் தனது மக்களுக்காக உண்மையாக ஆற்றிய சேவையிலேயே தங்கியிருக்கும். தேர்தல் காலத்தில் மக்கள் அதிகம் சிந்திக்க வேண்டியது இதுபற்றி யதே!

காக்காக் கடி...

சதுக்குட்டி

தேர்மதேவருக்கு ஊரில் பெரும் மவுசு. அவரிடம் சந்திரிகா அம்மையார் ஓடிய கார் நிற்கிறது. மவுசுக்குக் காரணம் அந்தக் கார் மாத்திரமல்ல. அந்தக் காருக்குப் பிறகு அவர் வாங்கிய சுப்பர் கப் மோட்டச் சைக்கிள், பிராண்ட் மங்கிப்போன தட்டை வான், றலி சைக்கிள் என ஏகப்பட்டதுகளும் தான். நடந்துதிரியுற சணம் அதிகமுள்ள அந்த ஊரிலை நம்மாள் மில் வைச்சிருக்கிறார். அது அந்தக் காலத்து மிசினுகளோடை இப்பையும் வேலை செய்யுது. அந்த மில்லிலை இருந்து உழைச்சுத்தான் இதுகள் எல்லாத்தையும் வாங்கினவர் தேவர். மில் ஆரம்பகாலத்து மிசினுகளோட இப்பயும் ஓடேக்குள்ள உந்த வாகனங்கள் எல்லாத்தையும் எப்பிடி வைச்சிருப்பார் எண்டு செல்லவேண்டியிராது. சந்திரிக்காவின்ர கார் றோட்டாலை போகேக்க இப்பையும் மினுங்கும். அப்பிடி எல்லாத்தையும் பக்குமாத் துடைச்சுத் துடைச்சுப் பாவிக்கிற மனுசன். அதுகளிலை ஏதேன் பிரச்சினையெண்டால் மனுசன் மெக்கானிக் கடையிலை படுக்கையைப்போட்டுத் திருத்திக் கொண்டுதான் வீடுவந்து சேரும். தேவரின் அடுத்த தலைமுறை வாரிசு தேவருக்கு நேர் எதிர். அடுத்த தலைமுறையெண்டால் அவருடைய தங்கச்சியின்ர மகன் எண்டு வைச்சுக் கொள்ளுங் கோவன். அவன் சின்ன வயசிலை கொழும்பிலையிருந்து வளந்தவன். உவரைப்போல மோட்டச் சைக்கிளைத் திருத்தித் திருத்திச் துடைச்சுப் பாவிக்கிற பழக்க மெல்லாம் கிடையாது. பல்சர் அலுத்துப் போச்சுதெண்டால் எவ்சற் எடுப்பான் அது அலுத்துப்போனால் கொணற் எடுப்பான் அது அலுத்துப்போனால் அடுத்தது எடுப்பான். குவாவி, சம்சுங், அப்பிள், அடுத்தது எண்டு அவன் எதிலையும் அப்பிடித்தான். தேவரைப்போல துடைச்சுப் பக்குவம்பேணி அதோடையே மல்லுக்கட்டும் பழக்கம் அவனுக்கில்லை. அவர் எல்லாத்திலையும் பக்குவமான, பக்குவமடைஞ்ச மனுசன் எண்டு தேவரின் மனுசி புகழாரம். உவன் எல்லாத்தையும் துலைக்க வந்த பிரளுவான் எண்பாள் அந்தப் பொடியனின் தாய். இரண்டு தலைமுறை இடைவெளியில் எவ்வளவு மாற்றங்கள்? இந்த இரண்டு பேரும் ஒரு வீட்டுக்குள்ளை இருந்தால் எப்பிடியிருக்கும். சமாளிப்பும், விதண்டா வாதமும் தான்

தேர்தல் காலம் வந்து விட்டாலே பத்திரிகைகள், சமூகவலைத்தளங்கள், ஒன்றுகூடும் இடங்கள் என எல்லாவற்றிலுமே அது பற்றிய அரட்டைகள், விவாதங்கள், பரப்புரைகள் நிறைந்திருப்பது வழமை. இந்த முறையும் இது விதி விலக்காகாது. இவற்றில் அடிமட்டத்தினரின் பங்களிப்பு இல்லாவிட்டாலும் முகநூல், பத்திரிகைகள், எழுத்தாளர்கள், அரசியல் விமர்சகர்கள் என ஒவ்வொருவரும் ஆளுக்கொரு அரசியல்வாதிகளுக்குப் பின்னால் இழுபடுவர். துதிபாடுவர். கொடி பிடிப்பர். கருத்துத் தெரிவிப்பர். இது காலம் மாறாத செயல். அதுபோகட்டும்.

இந்த வாக்குச் சீட்டுக் குறித்த தகவல் அண்மையில் வெளியாகியிருந்தது. வாக்குச் சீட்டுகள் தமது நீள, அகலங்களால் பெருப்பிக் கப்படுகின்றன என்பதே அந்தத் தகவல். அதாவது வேட்பாளர்கள், கட்சிகளின் தொகைக்கு ஏற்ப வாக்குச் சீட்டின் அளவு பெரிதாகின்றதாம். நாடாளுமன்றக் கதிரைகளுக்குப் போட்டியிடுகின்றவர்களின் தெகை அதிகரித்திருப்பதே அதற்கான காரணம். அது மட்டுமல்ல கட்சிகளின் தொகையும் அதிகரித்துள்ளது. இறுதியாக நடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் வாக்குச் சீட்டுகளின் நீளம் அதிகரித்துத்தான் இருந்தது. போட்டியிடுகின்ற கட்சிகள், நபர்கள் அதிகமாகியதால் வந்த வினைதான் இது. பெருமளவு சிங்களவர்களால் நிறைந்துள்ள நாட்டில் அவர்களைப் பிரதிபலிக்கின்ற வகையில் இரண்டு, மூன்று கட்சிகள் இருக்கையில் இங்குள்ள சிறுபான்மைத் தமிழர்களின் வசம் அவர்களை விடவும் அதிகளவு கட்சிகள் இருக்கின்றன. இவை அனைத்தினதும்

அரசியல்வாதிகள் பாருங்கள்...?

இலக்கு என்ன வென்றால், தமிழ் மக்களுக்குத் தீர்வு. சற்று விளக்கமாகச் சொன்னால், தனி ஒரு மனிதனாக வேலுப்பிள்ளை பிரபாகரன் முன்னெடுத்த அதே வேலையை இவர்கள் பலபேராகப் பிரிந்து முன்னெடுக்கிறார்களாம். அதற்கு ஆளாளுக்கொரு கட்சி. ஆளுக்கோர் அரசியல். எம்மவர்கள் என்னவொரு ஒற்றுமையான

முதல் முறையாக முகக் கவசம் அணிந்தார் ட்ரம்ப்



இந்தோனேசியாவின் ஜாவாத் தீவில் வழியாட்டாளர்கள் வீசிய அரிசி, பழம், காய்கறிகளை கிராமத்தவர்கள் பிடிக்கிறார்கள்.

கொரோனாவால் அன்புக்குரியவர்களை அணைக்க இயலாத நிலையில் இஸ்ரேலியர்கள் மரத்தை கட்டிப்பிடிகிறார்கள்.

உலக ஈர்ப்பு

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடியுடன் கூடிய மழை பெய்தது. அங்குள்ள ஹட்சன் ஆற்றை ஊடறுத்து வெட்டிய மின்னல் இது.

தென்கொரியாவில் ட்ரோன்கள் மூலம் விழிப்புணர்வு.

அமெரிக்காவின் சான் டியாகோ துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த விமானம் தாங்கிக் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டது.

நதிக்கரை எச்சம்

வண்டிலுக்கு அடியில்
அரிக்கன் லாம்பாய் தொங்கவிட்டிருக்கிறது காலம்.
எதனோடும் முட்டிவிடக்கூடாதெனும் முனைப்போடே
முக்கால்வாசிப் பயணம் முடிந்துவிட்டது.
காற்றில் கிழித்துப்போட்ட காலாவதிக் கடிதமாய்
அலைந்துகொண்டிருக்கின்றன என் நினைவுகள்
சமரசம்செய்தவை தவிர மற்றெல்லாம்
நிலத்தில் கிடந்து புரள்கின்றன.
எங்கோ என் தேகத்தில்
இனத்துளியின் ஈரங்கிடந்ததால்
காயவைப்பதற்கு காலிவரைக்கும்
என் வண்டில் பயணப்பட்டது.
கடைசியில் காய்ந்துவிட்டதென நம்பி
திருப்பப்பட்டது.
முதலாம் பாகம் மோசமானது
இன்றுவரையும் தன் அத்தியாயத்தை நீட்டிக்கொண்டிருக்கிறது
ஒவ்வொரு முறையும் முற்றுப்புள்ளி
ஏமாற்றத்தோடே திரும்புகிறது.

இவளோடு சேர்த்து எட்டாவது
இனி எவளோடு சேர்ந்து படிப்பதெனத் தெரியாமல்
என் தலையருகில் மூன்றாம்பால்
முழித்துக்கிடக்கிறது
என்னுடைய விசம் கொஞ்சங்கொஞ்சமாய்
நீலம்பாரிக்கத்தொடங்கிவிட்டது
சாகும்வரைக்கும் காத்துக்கிடக்கின்றன கறையான்கள்
பச்சைதின்று அவைக்கு பழக்கமில்லையாமே
தூரத்தில் நிற்பதால் நட்சத்திரமென்றே நம்பிவிட்டார்கள்
கீழிறங்கிவந்தால்தான் சூரியனெனக் கொண்டாடுவீர்களென்றால்
நான் எரிகல்லாகவே இருந்துவிடுகிறேன்
முதலாம் பாகத்தில் பாடுகள் சுமந்தவன்
அடுத்தபாகத்தில் ஆண்டவனாகினான்
ஆரம்பத்தில் ஆண்டவனாயிருந்தவனின்
பழைய கணக்கு பாடுகள் தானே?
சுமப்போம்
இன்னொரு நதிக்கரையில் எங்கள் எச்சம் புதையும்வரை

– சி.ப.வேந்தன்

> ஒருவரை ஒருவர் கவிழ்ப்பதற்கு வேட்பாளர்கள் முனைகிறார்கள். முகப்புத்தகம், பத்திரிகை போன்ற வற்றில் மற்ற வேட்பாளர்களை அவதூறு செய்கிறார்கள் இதன்மூலம் எதிரணியை வீழ்த்தலாம் என்று நினைக்கிறார்கள். இதனால் கூட்டமைப்பின் வாக்கு வங்கியே சிதையும்

தமிழர்களின் துன்பியல்

■ அருணாச்சலம்

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் பசீர் காக்கா சுமந்திரன் தொடர்பில் வெளியிட்ட ஊடக அறிக்கையைத் தனது முதற்பக்கத்தில் செய்தியாக்கியிருந்தது உதயன் பத்திரிகை.

உள்ளூராட்சிமன்றங்களின் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் 4.7.2020 அன்று வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் மண்டபத்தில் இருந்தவர்களுக்கு சுமந்திரன் அன்றையதின உதயன் பத்திரிகைப் பிரதிகளைத் தானே வழங்கினார்.

இந்தச் செயற்பாடுகள் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கிடையில் காணப்படுகின்றன பகிரங்க மோதலை அப்படியே அப்பட்டமாகக் காட்டின. தமது கட்சிக்குள்ளேயே ஒருவர் இன்னொருவரை விமர்சித்துத் தோற்கடிப்பதில் உள்ள போட்டி முன்னிற்பது அப்பட்டமாகத் தெரிகின்றது.

2015ஆம் ஆண்டுத் தேர்தல் வரை கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரை யுக்திக்கு ஈ.பி.டி.பி. கட்சியும் அரச படைகளும் தென்னிலங்கைக் கட்சிகளுமே தீனியாக இருந்தன. இந்தத் தேர்தலில் அதே அரைத்த மாவை அரைக்கவும் முடியாது. மக்களுக்கும் அதனைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போய் விட்டது. ஆக, வெளியே எந்த எதிரியும் இல்லாத நிலையில் கட்சிக்குள்ளேயே அடிபடத் தொடங்கிவிட்டார்கள்.

கூட்டமைப்பின் நிலமை இப்படி யென்றால் மற்றைய பக்கத்தில் விக்னேஸ்வரன் கஜேந்திரகுமார்பக்கத்து நிலமையும் பரிதாபம்தான்.

2015 இல் முதற் தடவையாக வடமாகாண முதல்வரான விக்கினேஸ்வரன் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு மக்கள் வாக்களிக்கக்கூடாது என்பதைப் பூடகமாக அறிவித்திருந்தார். அவரது எண்ணப்படி கூட்டமைப்புக்கு மாறாகக் கஜேந்திரகுமார் அணிக்கு வாக்களிப்பது நல்லது எனவும் கூட்டமைப்பில் உள்ள மோசமான தலைவர்களைத் தவிர்த்து மக்களின் தெரிவுகள் இடம்பெற வேண்டும் எனவும் கருத்து வெளியிட்டார். ஆனால் விக்கினேஸ்வரனின் இந்த இரு எதிர்பார்ப்புகளும் வெற்றியளிக்கவில்லை. 2020 இல் நேரடியாக்க் கூட்டமைப்புக்கு ஏதிராகக் களமிறங்கியிருக்கிறார் விக்கினேஸ்வரன்.

2015இல் அவர் ஆதரித்த கஜேந்திரகுமார்கூட அவருடன் இல்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒருபுறத்தில் விக்னேஸ்ரனைக் கூட்டமைப்பின் முகவர் போன்று கடுமையாக விமர்சிக்க, பதிலுக்கு விக்னேஸ்வரனும் முன்னணியைக் கடுமையாத் தனது கேள்வி - பதில் அறிக்கைகளில் போட்டுத் தாக்குகின்றார்.

இதுபோதாதென்று விக்னேஸ் வரனுடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருந்த முன்னாள் மாகாண சபை அமைச்சர் பொ. ஐங்கரநேசனும் விக்னேஸ்வரனை அண்மையில் கடுமையாக விமர்சித்திருந்தார்.

மாவீரர் தினத்திற்குக்கூட வருவதற்கு விரும்பாதவர்கள் இன்று தமபி பிரபாகரன் என்று உருகுகிறார்கள் என்று விமர்சித்திருந்தார்.

இதற்கும் மேலாக முன்னணிக்குள்ளேயே சட்டத்தரணிகள் மணிவண்ணன் அணி, சுகாஸ் அணி என்று இரு அணிகளாகப் பிளவுபட்டு நிற்பதாகவும் தகவல்கள் வருகின்றன. விசயம் வெளியே பெரிதாக வெடிக்கவில்லை என்ற போதும் உள்ளே நெருப்பாகப் புகைந்து கொண்டேயிருக்கின்றது என்கின்றன கட்சி வட்டாரங்கள்.

சுமந்திரனின் தன்னிச்சையான செயற்பாடுகள், சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய பேட்டியில் ஆயுதப் போராட்டம் தொடர்பில் அவர் தெரிவித்த கருத்துப் போன்ற விடயங்களால் கூட்டமைப்புக்குள்ளேயே சுமந்திரன் சார்பு அணி, எதிரணி என்று இரண்டு முகங்கள் உருவாகிவிட்டன.

இந்த முரண்பாட்டுப் பின்னணியில் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வில் சுமந்திரன் உதயன் பத்திரிகையைக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கியமை மேலும் நிலமையைச் சிக்கலாக்கியது.

கூட்டமைப்புக்குள்ளேயே நுள்ளுப் பிராண்டி கிள்ளுப் பிராண்டி நிலை ஏற்பட்டுள்ளது.

இது விடயமாகக் கருத்து வெளியிட்ட தமிழசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, ஒருவரை ஒருவர் கவிழ்ப்பதற்கு வேட்பாளர்கள் முனைகிறார்கள். முகப்புத்தகம், பத்திரிகை போன்ற வற்றில் மற்ற வேட்பாளர்களை அவதூறு செய்கிறார்கள் இதன் மலம் எதிரணியை வீழ்த்தலாம் என்று நினைக்கிறார்கள். இதனால் கூட்டமைப்பின் வாக்கு வங்கியே சிதையும் என்று குறிப்பிட்டிருந்தார்.

2009க்குப் பின்பான காலத்தில் ஈழ அரசியல் என்பது தலைவர்கள் தமக்குள் அதிகம் பிளவுபட்டு ஆளையாள் வீழ்த்துவதற்குக் கங்கணம் கட்டி நிற்கும் கால மாக மாறிவிட்டமை தமிழர்களின் துன்பியல். ■

எங்கட வோட்டு உங்களுக்குத்தான்!

■ நெடுந்தீவு மகேஷ்

ஒரே நாளில் ஒரே நேரத்தில் வாசலில் வந்துநின்ற தபாற்காரனிடமிருந்து சுப்பையரின் கைகளில் திணிக்கப்பட்ட ஒரு கட்டுத் தபால்களைப் பார்த்ததும் அதிர்ந்தாள் அவரது மனைவி சின்னாச்சி

"என்னப்பா இத்தனை கடுதாசி? எங்கயிருந்தப்பா வந்திருக்கு?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள் அவள்!

அங்கே வந்திருந்த கடிதங்கள் யாவுமே தேர்தல் காலத்தில் இந்தப் போட்டித் தேர்தலில் தமது புழுகு மூடைகளை அவிழ்த்துக் கட்டிய தேர்தல் விஞ்ஞாபனங்கள் என்பது சுப்பையருக்குத் தெரிந்தே இருந்தது.

அவர் சின்னாச்சியைப் பார்த்துப் புன்னகைத்தவாறு,

"இது எங்கட கட்சிக்காரங்கள்ட கடதாசி" என்றவர், தான் வாங்கிய கடிதங்கள் அனைத்தையும் அருகிலிருந்த மேசையில் அலட்சியமாகத் தூக்கிப் போட்டார்.

சின்னாச்சியும் அவரது செய்கையை ஆமோதிப்பவர் போல எதுவுமே பேசாமல் குசினியை நோக்கி நடந்தாள்.

நடைபெறப்போகும் இந்தத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல். ஒரு மாவட்டத்திற்குத் தொகுதியடிப்படையில் ஒரு தொகை போட்டிக்கு நிற்கிறார்கள்.

பத்துப் பதினைஞ்சு கட்சிக் குழுக்களும் எட்டோ பத்தோ சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுவது தெரிகிறது. இத்தனை கட்சிகளும் வேட்பாளர்களும் எதற்காக?

அத்தனை பேரின் எண்ணத்திலும் தாமே வென்று நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்ற ஆவலே நிறைந்துள்ளது.

வெற்றி தமக்கு வராது என்று நன்கறிந்த பலரும் இந்தப் போட்டிக்கு முகம் கொடுத்துள்ளார்கள். ஏன்?

அது இரகசியம்!

சுப்பையரின் கட்டுப்பாட்டில் இருப்பதோ ஒரேயொரு வாக்குத்தான். அவரது மனைவி சின்னாச்சியையும் அவரது வார்த்தைகள் கட்டுப்படுத்தப் போவதில்லை. அவரது மகன் சாரங்கனும் அவ்வாறுதான்.

வெறும் சீனிப் பேணிக்குள் மொய்த்த எறும்புகளாக ஊர்ந்து திரியும் கூட்டம் வேட்பாளர்கள்.

சுப்பையர் ஒரு பொழுது அதனை எண்ணி மயங்கிப் போனார்.

தேர்தலில் நிற்பவர்களில் அநேகர் முன்னர் ஒரே கட்சியில் இருந்து அதன் கொள்கையைச் சொல்லிக் கூக்குரலிட்டவர்கள்தாம். இன்று தனித்தனியாகக் கட்சியமைத்துத் தலைவர்களாகிப் போட்டிக்கு நிற்கிறார்கள். இவர்கள் பல அங்கத்தவர்களைத் தெரிந்தெடுக்க நடைபெறப் போகிறது.

கடந்த காலத்தில் எத்தனையோ தேர்தல்களைச் சந்தித்தவர் சுப்பையர் அவரின் பார்வையில் இந்தத் தேர்தலின் பின்னான முடிவுகள் பல சோதனைகளையும் வேதனைகளையும் தரப் போவதாகவே உணர்ந்தார்.

இந்தத் தேர்தலில் இந்த மாவட்டத்தில் ஆறு பேரைத் தெரிவு செய்ய முந்நூறு பேர்வரையில் வேட்பாளர்களாகப் கூட்டுக்களைச் சேர்த்துக்கொண்டு நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை செய்யப் போவதாக நாளும் பொழுதும் பேசித் திரிகிறார்கள்.

சுப்பையர் என்றுமே தனக்கென ஒரு கட்சியையும் அதற்கென ஏற்றுக் கொண்ட கொள்கை யையும் விரும்பிப் பயணிப்பவர். இன்று சற்றே மயங்கித்தான் போனார். ஒரே உறவுகள் ஒரே ஊரவர்கள் ஒரே கொள்கையைச் சொல்லி வந்தவர்கள் இன்றோ இலட்சியத்தை அடையப் பயணிக்கும் 'பாதைகளோ பல உள்ளன' எனத் தனித்தனியே பறை சாற்றித் திரிகிறார்கள்.

ஒற்றுமையைக் குலைத்து, இவர்கள் எதனைத் தேடிப் பயணிக்கிறார்கள்.

ஒருவரை ஒருவர் கேலியும் கிண்டலும் செய்துகொண்டு தமது வெற்றிக்காகவே உழைப்பதாக அவர்களின் நாடகங்கள் மேடையேறுகின்றன.

மக்களுக்கும் மண்ணுக்கும் சேவையாற்றுவதாயின் ஏன் ஒன்றி நின்று குரல் கொடுக்கும் நல்லெண்ணம் இவர்களுக்கு இல்லாது போனதோ!

சுப்பையர் வேதனைப்பட்டார்.

விரித்துப் படிக்காமலே மேசையில் போட்ட காகிதங்களை அவர் ஒருமுறை திரும்பிப் பார்த்தார். ஆவை ஒவ்வொரு வேட்புக் குழுவின ரிடமிருந்தும் சுப்பையர் வீட்டிலுள்ள ஒவ்வொரு வாக்காளரும் தனித்தனியாக வாசிக்கவேண்டும் என்பதற்காகவோ என்னவோ மூன்றால் பெருக்கி அனுப்பப்பட்டிருந்தன. அதில் ஒன்றைக்கூட அவர் உடைத்துத் திறந்து பார்க்க வில்லை. மனைவி சின்னாச்சியும் அவற்றை வாசிக்கப் போவ தில்லை வெளியே போன சாரங்கன் வீட்டுக்கு வந்து இவற்றைக் கண்டால் சிலவேளை வாசிக்கலாம்.

குசினிக்குள்ளிருந்து வெளியே வந்த சின்னாச்சி "என்னப்பா இந்தக் கடதாசிக் கட்டிலை ஒண்டையெண்டாலும் எடுத்து வாசியன் அப்பா கேட்டம்" என்றாள்.

'என்ன எல்லாம் ஒரே கதையாத்தான் இருக்கும்! ஒவ்வொருமுறையும் தேர்தலில் நிக்கிறவை தாங்கள் வெல்ல வேணும் என்றதுக்காக எல்லாத்தையும் சொல்லுவினம்! பொய்யும் புழுகும் சிலருக்கு வழக்கம். அடுத்தவனைக் குறை சொல்லி அரசியல் பேசுறது சிலரது பழக்கம்." என்றார் சுப்பையர்

'அப்ப நாங்கள் யாருக்கு வோட் போடுறது?" என்று கேட்டு,அங்கலாய்த்தாள் சின்னாச்சி.

'இண்டைவரைக்கும் எல்லாரும் சொல்லிறது-ஒண்டு செய்யிறது ஒண்டு எண்டுதான் ஆட்சியில இருந்திருக்கினம். யாருக்குப் போட்டாலும் நிலைமை ஒண்டுதான். இங்க வேட்பாளர் எல்லோரும் பேச்சுப் போட்டிதானே நடத்துகினம்" என்றார் வெறுப்போடு.

அந்தவேளையில் வீட்டுக்குள் நுழைந்த மகன் சாரங்கன் மேசையில் கிடந்த காகிதக் குவியலைப் பார்த்து 'இதென்னப்பா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

'அது தேர்தல் விஞ்ஞாபனங்கள.; ஒவ்வொரு வேட்பாளரும் அனுப்பியிருக்கினம். உனக்குந்தான்!"

பொறிக்குள் சிக்கிய எலியைப் பார்க்கும் பூனையாக ஒரு பொழுது அவற்றைப் பார்த்தவன் மேலெழுந்தவாரியாக அவற்றில் ஒரு கவரை எடுத்து உடைத்துத் திறந்தான். அங்கே வண்ணத்தில் அச்சிடப்பட்ட படங்களோடு காணப்பட்ட அறிக்கையும் அருகில் புள்ளடியிடப்பட்ட சின்னமொன்றின் படமும் இருந்தது. அதைப் பார்த்தவன் அதிலுள்ளவற்றை வாசிக்கவில்லை. மீண்டும் அதனை மேசையில் போட்டவன் அலட்சியமாக அறைக்குள் நுழைந்தான்.

சுப்பையரின் பார்வையோ அவனின் நடவடிக்கைகளை ஆராய்ந்தது. அவனோ எதுவுமே பேசவில்லை. சுப்பையரின் மனதில் எழுந்த கேள்விகளை வெளியே துப்ப அவருக்குத் துணிவு வரவில்லை.

'இவன் யாரை ஆதரிக்கிறான்? யாருக்கு வோட் போடப்போறான்?. மனம் அங்கலாய்த்தது.

'அவனுக்குப் போடாத இவனுக்குப் போடு!" என்று கூவும் பலருள்ளே, 'எனக்குப்

(22 பக்கம் பார்க்க)

'என்ன எல்லாம் ஒரே கதையாத்தான் இருக்கும்! ஒவ்வொருமுறையும் தேர்தலில் நிக்கிறவை தாங்கள் வெல்ல வேணும் என்றதுக்காக எல்லாத்தையும் சொல்லுவினம்! பொய்யும் புழுகும் சிலருக்கு வழக்கம். அடுத்தவனைக் குறை சொல்லி அரசியல் பேசுறது சிலரது பழக்கம்."



மூளைக்கு வேலை! முடிகிறதா பாருங்கள்!



5

இந்தக் குவளைகளில் எது முதலில் நிரம்பும்

தேசி – இஞ்சி ரசம்

ரசம் என்பது ரசித்து ருசித்துக் குடிப்பதாக இருக்கவேண்டும். அதனாலோ என்னவோ ரசம் என்பதற்குச் சுவையானது என்று பொருள் கொள்கின்றனர். ரசம் என்பதை நவரசங்களாக வெளிப்படுத்துகின்றனர் பரதநாட்டியக்காரர். இவ்வாறு எல்லையற்று விரிந்து பொருள்படுகின்ற ரச வகை உணவொன்றே இந்தத் தேசி - இஞ்சி ரசம். நம்மவர்கள் சாதாரணமாக வீடுகளில் தயாரிக்கின்ற ரசத்தில் இருந்து சற்று வேறுபட்டது இது.



ரசம் என்ற பெயரில் உள்ளூர் உணவுக் கடைகளில் கலக்கின்ற கசப்பு நீரிலிருந்து முற்றிலும் வேறுபட்டது இந்த ரசம். மிக இலகுவாகத் தயாரிக்க முடிவதும்கூட. அவ்வகை ரசத்தை எவ்வாறு செய்வது.

இந்த ரசத்துக்குத் தேவையான பொருள்கள்:

இந்த ரசத் தயாரிப்புக்கு முதன்மையும் முக்கியமானதுமான பொருள் இஞ்சிக் கிழங்கு. அது 50 கிராம் அளவில் தேவை, அடுத்து பருப்பை வேகவைத்து வடித்தெடுத்த தண்ணீர் - 2 டம்ளர். பச்சை மிளகாய் - 1, மஞ்சள் தூள் சிறிதளவு, மல்லி, கறிவேப்பிலைகள். சீனி சிறிதளவு, இரண்டாக வெட்டப்பட்ட தேசிக்காயின் பாதிப் புளி, தேவையான அளவுக்கு உப்பு, 2 கரண்டி நெய், கடுகு, சீரகம், மிளகு தூள், பெருங்காயம் சிறிதளவு, 1 தக்காளிப்பழம்.

எப்படிச் செய்வது?

சட்டி ஒன்றை எடுத்து அதில் 2 கரண்டி நெய்யையும் விட்டு அது சூடானதும் கடுகு, சீரகம், மிளகுதூள், பெருங்காயம் ஆகிய வற்றைப் போட்டுத் தாளிக்க வேண்டும். பிறகு தக்காளிப் பழத்தை நறுக்கியும் இஞ்சிக் கிழங்கைத்துருவலாக்கியும்எடுத்துஅவற்றுடன் உப்பு, மஞ்சள் தூள், நறுக்கிய பச்சை மிளகாய் ஆகியவற்றைச் சேர்த்துப் புரட்டி பருப்புத் தண்ணீரைச் சேர்க்க வேண்டும். சூடாகிப் பொங்கி வரும்போது மல்லி இலை, கறிவேப்பிலை, சீனி, தேசிப்புளி ஆகியவற்றைச் சேர்த்து அதன் பின் அதிகம் கொதிக்க விடாது இறக் குங்கள். கம கம வாசத்துடன் மென் சூட்டுடன் பருகுங்கள். ரசம் ருசிக்கும்.

இடுப்பைச் சுற்றியுள்ள கொழுப்பைக் கரைக்க!

உத்திதமேரு என்று குறிப்பிடப்படுகின்ற இந்த உடற் பயிற்சி முறையைத் தொடர்ந்து செய்யும்போது வயிற்றில் உள்ள உறுப்புகள் புத்துணர்வு பெறுகின்றன. இடுப்புப் பகுதியைச் சுற்றிச் சேர்கின்ற தேவையற்ற கொழுப்பு அங்கிருந்து நீக்கப்படுகின்றது. இதனால் வயிற்றுத் தசைகள் பலம் பெறுகின்றன. தரையிலிருந்து முதுகை மேலே தூக்கி சாய்வான நிலையில் சில நிமிடங்கள் வரை வைத்திருப்பதே இந்த உடற்பயிற்சி. நல்லதொரு தரையில் மல்லாந்து படுத்துக், குதிக்கால்களை சேர்த்துக்கால் விரல்களை அகற்றிவைக்கவும். கைகளைப் பக்கவாட்டில் நீட்டிவைக்கவும். உள்ளங்கைகள் மேல் நோக்கியபடி இருக்கட்டும். தலை எந்தப் பக்கமும் சாயாமல் இருக்கட்டும். தலைக்கு நேராக முதுகெலும்பு இருக்கட்டும். இடது, வலது உடல் பாகம் சமமாகத் தரை விரிப்பின் மேல் பதிந்து இருக்கட்டும். மார்பைக் குறுக்காமல் நிமிர்த்தி வைக்கவும். கண்களை அழுத்தாமல் இலேசாக மூடவும். உடல் முழுவதையும் தளர்வாக வைத்துக் கொள்ளவும். சில வினாடிகள் ஓய்வாக இருந்த பிறகு கைகளைத் தலைக்குப் பின்னால் நீட்டி வைக்கவும். உள்ளங் கைகள் மேல் நோக்கியபடி இருக்கட்டும். கால்கள் இரண்டையும் சேர்த்து வைக்கவும். மூச்சை இழுக்கவும். கைகளில் இருந்து இடுப்பு வரை உள்ள உடல் பகுதியை மேலே தூக்கி 40 அல்லது 45 டிகிரி கோண அளவில் நிறுத்தி மூச்சை வெளியே விடவும். கால்களுக்கு முன்னால் கைகள் நேராக இருக்கட்டும். முதுகைச் சாய்த்து நேராக வைக்கவும். உள்ளங்கைகள் கீழ் நோக்கியபடி இருக்கட்டும். மூச்சுடன் 10 முதல் 30 வினாடி வரை இருந்து பிறகு மூச்சை உள்ளுக்கு இழுத்து நிறுத்தி மல்லாந்து படுத்து மூச்சை வெளியே விடவும். அடிவயிறு, இடுப்புப் பகுதிகள் மீது கவனம் செலுத்தவும். இடுப்புவலி, இடுப்புப் பட்டை விலகல் உள்ளவர்கள் இந்த ஆசனத்தைச் செய்யக் கூடாது.

கூந்தல் சிக்காகின்றதா? இப்படியும் தீர்க்கலாம்!

பெண்களில் பெரும்பாலானவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினை அவர்தம் கூந்தலில் இருந்துதான் ஆரம்பிக்கின்றது. இதனால் கூந்தலைச் சரிவரப் பராமரிப்பது அவசியம்.

கூந்தலைச் சரிவரக் கையாளாமல் கூந்தல் பராமரிப்புக்குப் பணத்தையிறைக்கும் பெண்களும், அவ்வாறு பணத்தையிறைத்துப் பல திரவியங்களைத் தலைக்கு வைத்தும் போதிய பயன் கிடைக்காமல், கூந்தல் உதிர்வை எதிர்நோக்குகின்ற பெண்களும் பலருளர். இதனால் கூந்தல் பரா மரிப்பு மிக மிக முக்கியமானது.

தலைமுடியை நீளமாக வளர்ப்பதற்கு விரும்புகின்ற பெண்கள் சந்திக்கின்ற முதற் பிரச்சினை கூந்தல் சிக்கு. தலை முடிகள் ஒன்றுடன்ஒன்று சிக்கிப் பின்னிப் பிணைந்து கொண்டால் அந்தச் சிக்கை அவ்வளவு இலகுவில் எடுத்து விட முடியாது. சிக்கைத் தட்டியெடுப்பதற்குள் சினம் வந்து விடும். அந்தச் சிக்குப் பின்னர் கூந்தல் குறைவுக்கும், உதிர்வுக்கும், முடி அறுவதற்கும் வழி வகுக்கிறது. எனவே கூந்தலைச் சிக்குப்படாமல் கவனித்துக் கொள்வது முக்கியம். தலைமயிர் சிக்குப் படுவதற்கு தலை முடிக்கு இடையே பிளவுபட்டிருக்கின்ற முடித் தொகுதிகள் காரணமாக இருக்க லாம். அவ்வாறு இருந்தால் அந்த முடிகளைக் கண்டறிந்து கத்திரித்துக் கொள்ள வேண்டும். அத்தோடு உறங்கும் போது தலைமுடியைப் பின்னிக்கொள்வதும் பயனளிக்கும். அதைவிட முக்கியமானது வாகனப் பயணங்களின்போது கூந்தலை விரித்துவிடுவதைத் தவிர்ப்பது. ஆவ்வாறு கூந்தலை விரித்து விட்டாலும் தலையைத் துணி ஒன்றால் இலாவகமாகச் சுற்றிக் கொண்டால் கூந்தல் பாதுகாப்புப் பெறும்.

கொரோனாவை எதிர்க்கும் குழந்தைகள்!

கொரோனா வைரஸ் பரவிவரும் இந்தக் காலத்தில் பெரியவர்களைவிடக் குழந்தைகள் அந்த வைரஸ் குறித்த விழிப்புணர்வை அதிகம் உள்வாங்கி அதைத் திறம்படக் கையாள்கிறார்கள் என்று அமெரிக்காவில் நடந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கொரோனாவால் குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் காரணமாக அவர்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்ட அறிவூட்டலே இதற்குக் காரணம் என்றும் அந்த அறிவூட்டலைக் குழந்தைகள் சரியாகக் கடைப்பிடிப்பதால் அவர்கள் பாதிக்கப்படுவது குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மற்றைய மனிதர்கள் கொரோனா விழிப்புணர்வு குறித்த அறிவூட்டலை அலட்சியம் செய்வதால் நோய்த் தொற்றால் அதிகம் பாதிக்கப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஆளான 7ஆயிரத்து 500 குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் மருத்துவத் தரவுகளை ஆராய்ந்தபோது ஐந்தில் ஒரு குழந்தைக்கு கொரோனா வைரஸ் பாதிப்பின் எந்த அறிகுறியும் தெரிய வில்லை. நுரை யீரல் பகுதியை ஆய்வு செய்ததில் 21 சதவீத குழந்தைகளின் நுரையீரலில் மட்டுமே திசுக் காயத்தின் அறிகுறிகள் தெரிந்துள்ளன. 5.6 சதவீத குழந்தை கள் காய்ச்சல் அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த ஆய்வுக்குப் பின்னர், பெரியவர்களைவிட குழந்தைகள் கொரோனா வைச் சிறப்பாகக் கையாள்கிறார்கள் என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் வந்துள்ளனர். குழந்தைகளுக்குக் கொரோனா என்ற உடனே உலகமே முடிவுக்கு வந்து விட்டது போல இனிப் பெற்றோர் கலங்கத் தேவையில்லை.

மாற்றுத் தலைமை என்பது ஒரு மாயை

'மாற்றுத் தலைமை' என்ற மாயை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசிய விடுதலை நோக்கிய பாதையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும், அதன் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும் அசைக்க முடியாத சக்திகள். அவர்களின் வழிகாட்டுதலில் - அவர்களால் மக்களுக்கு அடையாளப்படுத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்களிடமிருந்து எளிதில் அப்புறப்படுத்தப்பட முடியாத சக்தியாக வியாபித்திருக்கிறது.

■ நரசிம்மன்

உரபரப்புக்குப் பஞ்சமே இல்லாத தமிழ்த் தேசிய அரசியலில் 2020 நாடாளுமன்றத் தேர்தல் மேலும் ஒரு படி பரப்பை அதிகரிக்கச் செய்திருக்கிறது.

தேர்தலுக்கான முஸ்தீபுகள் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதலே, கட்சிகளின் மோதல்கள் வலுப்பெறத் தொடங்கியிருந்தன. ஒருவர் மீது ஒருவர் வசை பாடுவதும், குத்து வெட்டும், குழி பறிப்புகளும் வஞ்சகமின்றி அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் காய்த்த மரத்துக்குக் கல்லெறி படுவது போல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான தாக்குதல் வலுப் பெற்றிருக்கிறது. இங்கே தான் நாம் சற்று உற்று நோக்க வேண்டியிருக்கிறது. எந்தவொரு அரசியல் கட்சிக்கும் இல்லாத வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் தலைவர்கள் மீது 'சொல்லெறி' தொடங்கியிருக்கிறது. தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் தவிர்க்க முடியாத சக்தியான தமிழரசுக் கட்சிக்கு – தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகப் பல்வேறு கருத்துக்கள் பரப்பப்பட்டுக் கொண்டிருப்போடு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்த நாடாளுமன்றத் தேர்தலோடு அப்புறப்படுத்தும் முயற்சியிலும் பலர் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள். மக்கள் மத்தியில் வேரூன்றி வியாபித்திருக்கும் கருத்தியலில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்காக ஓரிரு ஊடகங்களும் இவர்களுக்குத் துணை நிற்கின்றன. அதற்கேற்றாற் போல ஊடகவியலாளர்களும், ஊடக அமைப்புக்கள் சிலவும் செயற்பட்டு வருகின்றன.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனின் தொலைக்காட்சிச் செவ்வியும், அதனை ஊடகங்கள் 'காவித் திரிந்த' போக்கும், அதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்புக்களும் இதற்கு நல்ல உதாரணங்கள். சொந்தக் கட்சிக்குள்ளேயே பிளவை உண்டு பண்ணி அரசியல் லாபம் தேடுவதற்குப் பல முனைப்புகளும் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன.

"மாற்றுத் தலைமை" என்ற மாயை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த் தேசிய விடுதலை நோக்கிய பாதையில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும், அதன் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனும் அசைக்க முடியாத சக்திகள். அவர்களின் வழிகாட்டுதலில்-அவர்களால் மக்களுக்கு அடையாளப்படுத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மக்களிடமிருந்து எளிதில் அப்புறப்படுத்தப்பட முடியாத சக்தியாக வியாபித்திருக்கிறது. இதுவே இன்று பேரினவாத ஆட்சியாளர்களுக்கும், ஒரு சில சர்வதேச சக்திகளுக்கும் இருக்கின்ற தலையிடி.

தமிழர்களின் பெரும்பான்மைப் பலம் என்பது – தமிழர்களின் ஏகோபித்த தெரிவு என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கின்ற நிலையில், ஏனைய சக்திகளோடு பேரம் பேசுகின்ற வல்லமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உண்டு எனலாம். இந்தநிலையில் தமிழர்களைக் கூறு போட்டு, அவர்களின் ஒற்றுமையைச் சிதைத்து குளிர் காய்வதெற்கென ஒரு கூட்டம் காத்திருக்கிறது.

இது இன்று நேற்றல்ல, காலங்காலமாய்த் தொடர்ந்து வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாகத் தமிழர்கள் வரித்துக் கொண்டதன் பிறகு, அது ஓரளவுக்குக் கட்டுப்பாட்டில் இருந்ததாயினும், ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட தற்குப் பின் 'மாற்றுத் தலைமை' குறித்த முனைப்புக்கள் வீரியம் பெறத் தொடங்கியிருக்கின்றன. 2010ஆம் ஆண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் விலகியதன்



மூலம் இந்த முயற்சிக்குத் தூபமிடப்பட்டது. அந்தக் காலத்தில் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கென இருந்த வாக்குகள் பிரிந்ததனால், தமிழ்த் தேசியத்துக்கு எதிரான வர்களும், தேசியக் கட்சிகளும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு அந்தப் பிளவு வழி செய்திருந்தது.

அதன் பின், தொடர்சியாக மக்களின் தெரிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்து வந்த நிலையில், 2019 நவம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் பெறப்பட்ட வாக்குகள் ஆட்சியாளர்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. சஜித் பிரேமதாசா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படாவிட்டாலும், தமிழர்களின் வாக்கு பலம் ஆட்சியாளர்களுக்கு ஒருவித பயத்தை உண்டாக்கியிருக்கிறது.

இந்தப் பின்னணியிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் அரசியல் பரப்பிலிருந்து அப்புறப்படுத்துவதற்கும், குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், ஊடகப் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோரை அரசியலில் ஓரங்கட்டச் செய்வதற்குமாகப் பல்வேறு வழிகளிலும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்கான வழிமுறைகள் - வடிவங்கள் வேறாயினும் நோக்கம் ஒன்றே ஆகும்.

இந்த இடத்தில் 'மாற்றுத் தலைமை' குறித்து அந்தரப்படும் சக்திகளின் இலக்கு என்ன என்பது மிகப் பெரியதொரு சந்தேகத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

ஏனெனில், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஏக தலைமைத்துவத்தின் கீழ் எந்தவொரு கிலேசத்துக்கும் இடமில்லாமல் உள்நாட்டிலும் சரி, சர்வதேச ரீதியாகவேனும் சரி சமவலுக் கொண்ட பேரம் பேசும் சக்தியாக விடுதலைப் புலிகள் இருந்த காலத்திலாயினும், நாடாளுமன்றத்தை நிரப்பி எதிர்தரப்பில் பெரும் பான்மையைத் தமிழர்கள் கொண்டிருந்த காலத்திலும் சரி தமிழர்களின் உரிமை சார்ந்து பெரும்பான்மை அரசிடமிருந்து கடுகளவேனும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இன்று மாற்றுத் தலைமையின் தேவை பற்றிச் சிலாகித்துக் கொண்டிருக்கும் பல தலைவர்கள், அன்றைய பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த வேளையில் கூட இன்று அவர்கள் சொல்லும் வகையில் எந்தவொரு நன்மையையும் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவில்லை என்பது நிதர்சனம். இந்த நிலையில் மாற்றுத் தலைமை கோரி – நாடாளுமன்றக் கதிரைக்குக் குறி வைக்கும் இவர்களால் புதிதாக எதைப் பெற்றுக் கொடுக்க முடியும்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்தார்கள் என்று கேள்வி எழுப்புவதோடு, பகிரங்கமாகச் சாடுகின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், என். சிறீகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம் முதலான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிக் காலத்தில் - தாம் நாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தபோது தமிழ் மக்களுக்காக எவற்றைப் பெற்றுக் கொடுத்தார்கள்? அல்லது அவர்களின் கோரிக்கைகளுக்கு அமைய பேரினவாத அரசுகள் எதைக் கொடுத்தன? என்ற கேள்விகள் நியாயமாய் எழுகின்றன.

இது இவ்வாறிருக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நோக்கி விரல் நீட்டி, இன்று மாற்றுத் தலைமை குறித்துப் பேசும் அத்தனை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்போது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இப்போது கிடைத்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வரப்பிரசாதங்களில் எதையாவது மக்களுக்காக என்று சொல்லி அனுபவிக்க மறுத்திருக்கிறார்களா? அல்லது அரசால் வழங்கப்படும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கான ஓய்வூதியம் உட்பட்ட வசதிகளை மறுத்திருக்கிறார்களா?

இவ்வளவும் ஏன்? கடவுளின் மறு உருவமாகத் தன்னை வரிந்து கட்டிக் கொண்டு வந்து நிற்கும் வடக்கு மாகாண

(22ஆம் பக்கம் பார்க்க)

விடுகதைகள்

1 பொழுது சாய்ந்தால் பூந்தோட்டம்;
விடிந்து பார்த்தால் வெறும் தோட்டம்.

2 தாளைக் கொடுத்தால் தின்னும்;
தண்ணீர் குடித்தால் மடியும்.

3 பக்கத்திலுள்ள பட்டணத்தைப்
பார்க்க முடியவில்லை.

4 சூடுபட்டுச் சிவந்தவன்,
வீடுகட்ட உதவுவான்.

5 பட்டையைப் பட்டையை நீக்கி,
பதினாறு பட்டையை நீக்கி,
முத்துப் பட்டையை நீக்கி,
முன்னே வாராள் சீமாட்டி.

6 நித்தம் கொட்டும்; சத்தம் இல்லை.

7 மண்ணுக்குள்ளே இருக்கும் மாயாண்டி,
உரிக்க உரிக்கத் தோலாண்டி.

8 எண்ணும் முள்ளும் இல்லாத கடிகாரம்;
எவராலும் பார்க்க இயலாத கடிகாரம்.

9 கண் சிமிட்டும் ஒன்று:
மணி அடிக்கும் மற்றொன்று:
கண்ணீர் வடிக்கும் இன்னொன்று.

10 கண் இல்லாத நான்,
பார்வையிழந்தவர்க்குப் பாதை காட்டுவேன்.

விடைகள்

1. வானம்.
2. நெருப்பு.
3. முதுகு.
4. செங்கல்.
5. வாழைப் பூ.
6. கண் இமை.
7. வெங்காயம்.
8. இதயம்.
9. மின்னல், இடி, மழை.
10. கைத்தடி.

நிறம் தீட்டுங்கள்

விந்தை உலகம்!

மரியானா அகழி

சமுத்திரத்தின் மிக ஆழமான பகுதி இந்த மரியானா அகழி. இதன் ஆழம் 10ஆயிரத்து 924 மீற்றர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பசுபிக் சமுத்திரத்தில் ஜப்பானில் இருந்து தெற்கேயும் இந்தோனேசியா - பிலிப்பைன்ஸிலிருந்து கிழக்கேயுமாக அமைந்துள்ள மரியானா தீவுகளுக்கு அருகில் இந்த அகழி இனம் காணப்பட்டுள்ளது. மரியானா கடல் வளைவின் ஒரு பகுதியான இந்த அகழி, பசுபிக் சமுத்திரப் புவிக் கவசத் தகடும், சிறிய மரியானா புவிக் கவசத் தகடும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. இந்த அகழியின் அடிப் பகுதியில், அதற்கு மேலுள்ள நீரினால் ஏற்படும் அழுத்தம் (அமுக்கம்) 108.6 மெகாபாசுக்கல் ஆகும். இது கடல் மட்டத்தில் உள்ள பொது வளி மண்டல அமுக்கத்திலும் ஆயிரம் மடங்குக்கும் மேலானது. இந்த ஆழத்தில் வாழக்கூடிய உயிரினங்கள் மிகக் குறைவே. சில வகை ஆழ்கடல் மீன்கள் இந்தப் பகுதியில் இருப்பது தெரிய வந்துள்ளது. இந்த அகழி முதன் முதலாக, 1872ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 1876ஆம் ஆண்டு மே மாதம் வரையான ஆய்வுப் பயணத்தின் போது அளக்கப்பட்டது. அதன் படி இவ்வகழியின் ஆழம் 9ஆயிரத்து 636 மீற்றர்களாகப் பதிவு செய்யப்பட்டது. பின்னர் சலஞ்சர் 2 ஆய்வுப் பயணத்தின்போது, திருத்தமான எதிரொலிமானியைப் பயன்படுத்தி மீண்டும் அளக்கப்பட்டது. அப்போது இதன் அதிகூடிய ஆழம் 10ஆயிரத்து 924 மீற்றர்கள் எனப் பதிவு செய்யப்பட்டது. 8ஆயிரத்து 848 மீற்றர் உயரம் கொண்ட எவரெஸ்ட் சிகரத்தை விடவும் இந்த அகழியின் ஆழம் அதிகம் என்பது ஆச்சரியமூட்டக்கூடியது.

ஒற்றுமையே பலம்!

கோவில் ஒன்றின் கோபுரத்தில் சாம்பல் நிறப் புறாக்களும் வெள்ளை நிறப் புறாக்களும் வாழ்ந்து வந்தன. அவற்றுக்கிடையில் முரண்பாடுகளும், மோதல்களும் இடையிடையே இருந்து வந்தன. கோவிலில் திருவிழா ஆரம்பித்ததால் புறாக்கூட்டங்கள் வேறு இடம் தேடிப் புறப்பட்டன. பறந்து செல்லும் வழியில் ஓரிடத்தில் தானியங்களைத் தரையில் கண்டன. தரையிறங்கி அந்தத் தானியங்களை உண்ணத் தொடங்கின. அங்கு விரிக்கப்பட்டிருந்த வலையில் அவற்றின் கால்கள் சிக்கிக் கொண்டன. அந்தப் புறாக்களைப் பிடிப்பதற்காகத் தொலைவில் வேடன் மறைந்து கொண்டிருந்தான். புறாக்கள் வலையில் சிக்கியதும் அவற்றைப் பிடிப்பதற்காக ஓடி வந்தான். அதைப் புரிந்துகொண்ட புறாக்கள் உயிர்ப் பயத்தில் எல்லாப் புறாக்களுமாகத் ஒரே சமயத்தில் இறக்கைகளை அடித்து வலையோடு பறந்தன. பறந்து செல்லும்போது அதில் இருந்த சாம்பல் புறா ஒன்று கர்வத்தோடு, எங்களது வலிமையால்தான் நீங்களும் காப்பாற்றப்பட்டு இருக்கிறீர்கள். நாங்கள் சிறகை மிக வேகமாக அடித்துப் பறக்கவில்லை என்றால், எல்லோரும் அந்த நபரிடம் பிடிபட்டிருப்போம் என்றது.

நாங்கள்தான் வலிமையோடு பறந்தோம். உங்களிடம் பலம் இருக்கலாம், ஆனால் ஆற்றல் கிடையாது என்று உடனே வெள்ளைப் புறாக்களில் ஒன்று கூறியது. இதையடுத்து மற்றைய புறாக்களுக்கு இடையேயும் வாக்குவாதம் முற்றியது. பறக்கும் வேகம் குறைய ஆரம்பித்து, ஒரு மரக்கிளையில் வலையுடன் புறாக்கள் சிக்கிக் கொண்டன. அதுவரை அந்தப் புறாக்களைப் பின் தொடர்ந்து வந்து வலை விரித்த வேடன் புறாக்களைப் பிடித்துக்கொண்டான். ஒற்றுமையே வலிமை என்ற பழமொழிக்கேற்ப புறாக்கள் தப்பிப்பதற்கு வாய்ப்பிருந்தாலும் தமக்குள் ஒற்றுமை யில்லாததால் புறாக்கள் பிடிபட்டு விட்டன.



ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு - உணர்வீர் சிறாரே!

அறிமுகப்படுத்துகிறோம்!

இணைய வழி சுய பரீட்சைப் பயிற்சிகள்

MCQ Tutor - www.mcqtutor.com

பல்தேர்வு வினா பயிற்சியாளர்

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களிற்கான
விசேட பயிற்சிப் பரீட்சைகளின் தொகுப்பு

- தினமும் ஒரு பரீட்சை
- சரியான பதில்கள்
- உடனடி பெறுபேறு
- தன்னியக்க நேரக்கணிப்பான்
- வீட்டில் இருந்தே கற்கலாம்
- விரும்பிய நேரத்தில் பரீட்சை செய்யலாம்

பதிவுகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 817 0077
mcqtutor@gmail.com



உங்களுக்கு தேவையான பொருட்களினை
வீட்டிலிருப்தே பெற்றுக்கொள்ள

Semba Store

077 4 11 44 22

551A கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்



இந்தியாவில் கறுப்பு, வெள்ளை என வெளிப்படையான நிற வேற்றுமைகள் இல்லாதிருக்கலாம். ஆனால், பழுப்பு நிறத்தின் விகிதாசாரம் தனிமனிதன், குடும்பம், சமூகம் என்று எல்லா நிலைகளிலும் சகல உறவுகளிலும் முக்கிய வினையாற்றுகிறது என்ற உண்மை மறுக்க முடியாதது.

‘ஃபேர்’ வேண்டாம்... ‘லவ்லி’ போதும்!

திரைப் பாடல் வரிகள் கதாநாயகனின் காதல் ஏக்கத்தை மட்டுமல்ல, நாம் வாழும் சமூகத்தில் நிலவும் பொதுக் கருத்துகளையும் சேர்த்தே எதிரொலிக்கின்றன. ‘ப்ரியமுடன்’ படத்தில் ஒரு பாடல். ‘உன் ஃபேர் அண்ட் லவ்லி வாசம், என் பேரைச் சொல்லி வீசும்’ என்று பாடுவான் நாயகன். பெண் என்றால் ஏதோ ஒரு கிறீமை அள்ளி முகத்தின் மீது பூசிக் கொள்வதை வழக்கமாக வைத்திருப்பவள் என்ற எண்ணத்தின் வெளிப்பாடு அது. ‘ஃபேர் அண்ட் லவ்லி’ இப்போது ‘க்ளோவ் அண்ட் லவ்லி’யாகப் பெயர் மாறியிருக்கிறது. ஆபிரிக்க அமெரிக்கரான ஜோர்ஜ் ஃளாய்ட் நிற வெறிக்குப் பலியானதை அடுத்து, உலகளவில் நிறவேற்று மைக்கு எதிராக உருவாகிவரும் விழிப்புணர்வின் அடையாளமாக இந்தப் பெயர் மாற்றம் சித்திரிக் கப்படுகிறது.

பெயர் மாற்றம்

சருமத்தை வெள்ளை நிறமாக்கும் முகப்பூச்சுத் தயாரிப்புகளை கிழக்காசிய, மத்திய ஆசிய மற்றும் இந்தியச் சந்தையிலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்வ தாகக் கடந்த ஜூன் மாதம் அறிவித்தது ஜோன்சன் அண்ட் ஜோன்சன் நிறுவனம். அந்நிறுவனத்தின் முடிவு, அதன் போட்டி நிறுவனங்களுக்கும் அத்தகையதொரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியச் சந்தையில் முகப்பூச்சுத் தயாரிப்புகளில் முன்னணியில் இருக்கிறது ‘ஃபேர் அண்ட் லவ்லி’. பிரிட்டிஷ்-டச்சு பன்னாட்டு நிறுவனமான யுனிலிவரின் இந்தியப் பிரிவான ஹிந்துஸ்தான் யுனிலிவரின் தயாரிப்பு அது. இனிமேல், தோற்ற அழகைக் குறிக்கும் ஃபேர், வெண்மையைக் குறிக்கும் ஒயிட்டனிங், பளபளப்பைக் குறிக்கும் லைட்டனிங் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தப் போவதில்லை என்று ஹிந்துஸ்தான் யுனிலிவர் அறிவித்ததையடுத்து ‘ஃபேர் அண்ட் லவ்லி’யும் பெயர் மாறியிருக்கிறது. இது பெயரளவிலான மாற்றம் தானேயொழிய அதன் உட்கருத்து மாறவில்லை. பளபளப்பைக் குறிக்கும் க்ளோவ் என்ற வார்த்தையும் வெள்ளை நிறத்தைக் குறிக்கும் ஃபேர் என்ற வார்த்தையைப் போலவே இருக்கிறது என்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மிகப் பெரும் அழகுச் சந்தை

தெற்காசியாவிலும் ஆபிரிக்காவிலும் சருமத்தை வெள்ளை நிறமாக்கும் முகப்பூச்சுக்களுக்கு மிகப் பெரிய சந்தையிருக்கிறது. இந்தியாவில் ‘ஃபேர் அண்ட் லவ்லி’ மட்டுமே கடந்த ஆண்டில் சுமார் 4 ஆயிரத்து 100 கோடி ரூபாவுக்கு விற்பனையாகியிருக்கிறது. ஆசியர்களிடம் நிலவும் நிறம் குறித்த தாழ்வுணர்ச்சியே இந்த முகப்பூச்சுத் தயாரிப்புகளுக்கான முக்கிய மூலதனம். எதிர்ப்பாலின ஈர்ப்போடு நிறம் குறித்த சுயவெறுப்பும் சேர்த்துப் பதின் பருவத்தினரைக் கவலையில் ஆழ்த்திக் கொண்டிருக்கின்றன. 12 வயதுப் பள்ளி மாணவியின் புத்தகப் பையில் முகப்பூச்சுகள் இருப்பதற்கான காரணம், இந்த உளவியல் சிக்கல்தான். சமீப ஆண்டுகளில், இந்தியாவில் சருமநிறத்தை மாற்றிக்கொள்வதற்கான அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கையும்கூட அதிகரித்துவருகின்றன.

கறுப்பு அழகின் நிறம்

இன்னொரு பக்கம் இந்தத் தாழ்வுணர்விலிருந்து மீட்டெடுக்கும் பிரச்சாரங்களும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. பத்து ஆண்டுகளுக்கு முன்பு அரசு சாரா நிறுவனமொன்று முன்னெடுத்த ‘கறுப்பு என்பது அழகின் நிறம்’ இயக்கமானது திரைக் கலைஞர் நந்திதா தாஸின் பங்கேற்புக்குப் பிறகு பிரபலமானது. “சருமப் பராமரிப்பு முகப்பூச்சு விளம்பரங்களால் தன்னம் பிக்கை குறைவான பெண்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ‘நீங்கள் திருப்திகரமான வகையில் இல்லை, உங்களுக்குக் காதலனோ கணவனோ அவ்வளவு எளிதில் கிடைக்க மாட்டார்கள், வேலையும் கூட எளிதில் கிடைக்காது. உங்கள் பெற்றோர்களையும்கூட நீங்கள் துயரத்தில் ஆழ்த்துகிறீர்கள்’. இத்த கைய விளம்பரங்கள் சொல்லும் இந்தச் செய்திகள் மிக ஆபத்தானவை” என்று சாடினார் நந்திதா தாஸ். அவரைத் தொடர்ந்து அபய் தியோல் போன்ற சில நடிகர்களும் குரல் கொடுத்தார்கள். பிரபல நடிகர்கள் முகப்பூச்சு விளம்பரங்களில் நடிக்கக் கூடாது என்றும்கூட இந்த இயக்கத்தினரால் கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

சாய்பல்லவியின் மறுப்பு

முகப்பூச்சு விளம்பரங்களில் நடிப்பதைச் சிலர் தவிர்க்கவும் செய்தார்கள். அத்தகைய ஒரு விளம்பரத்தில் நடித்தால் ரூ.2 கோடி ஊதியம் கிடைக்கும் என்ற நிலையில், அது தனது கருத்துக்கு மாறானது என்று கூறி, அந்த வாய்ப்பை மறுத்தார் நடனக் கலைஞரும் மருத்துவருமான சாய்பல்லவி. பிரபல தொலைக்காட்சி நிறுவனமான என்.டி ரீவி, முகப்பூச்சு விளம்பரங்களை ஒளிபரப்புவதில்லை என்று 2015ஆம் ஆண்டில் உறுதிபட அறிவித்தது.

இணையவெளி இயக்கம்

நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் ‘அன்பேர்அண்ட்லவ்லி’ என்ற ஹேஷ் டேக்கைப் பயன்படுத்தி, இணைய வெளியில் ஓர் இயக்கம் முன்னெடுக்கப்பட்டது. அமெரிக்காவின் டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் படித்த 21 வயது மாணவி பாக்ஸ் ஜோன்ஸ், தனது தெற்காசியத் தோழியர்களின் ஒளிப்படங்களை வெளியிட்டுத் தொடங்கிவைத்த இந்தப் பிரச்சாரம் பெருந்தீயாகப் பற்றிப் படர்ந்தது. இந்தியப் பெண்கள் பலரும் தங்களது ஒளிப்படங்களைப் பதிவிட்டு இந்த இயக்கத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். அதன் விளைவாக, முகப்பூச்சுகளைப் பயன்படுத்தினால் சருமத்தின் நிறம் மாறுவதைப் போல காட்டப்படும் ‘ஃபேர் அண்ட் லவ்லி’ விளம்பரங்கள் கடந்த ஆண்டில் விலக்கிக்கொள்ளப்பட்டன.

இந்த நிறத்தோற்ற மாயைக்கு ஆண்களும் விதிவிலக்கல்ல. ஆனாலும், பெண்களே முக்கிய இலக்கு. நிறம் மட்டுமில்லை, பெண்களுக்கு உடல் மெலிவும் அழகென்று உபதேசிக்கப்படுகிற நாடு இது.

தற்போது ‘ஃபேர் அண்ட் லவ்லி’யின் பெயர் மாற்றத்துக்குக் கூறப்படாத ஒரு காரணமும் உண்டு. கடந்த பெப்ரவரியில், இந்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஒரு சட்டத் திருத்தத்தை முன்மொழிந்தது. 1954-ன் மருந்துகள் மற்றும் மாயத் தீர்வுகள் (ஆட்சேபகரமான விளம்பரங்கள்) சட்டத்தின்கீழ் சருமத்தின் நிறத்தை மாற்றுவது, பாலியல் சக்தியை அதிகப்படுத்துவது, மகப்பேறின்மைக்குச் சிகிச்சை, மூளைத் திறனை அதிகரிப்பது உள்ளிட்ட 78 வகையான நோய்கள் மற்றும் சிக்கல்களுக்குத் தீர்வுகள் அளிப்பதாய் விளம்பரம் செய்தால் 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 50 லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்படுவதற்கான சட்டத் திருத்தம் அது. முகப்பூச்சு விளம்பரங்களைத் தாண்டி, வேறு சில நல்ல விளைவுகளையும் இப்போது பார்க்க முடிகிறது. பிரபல திருமணச் சேவை இணையதளமான ‘சாதி டொட் கொம், நிறத்தின் அடிப்படையில் மணமக்களைத் தேடும் வசதிகளை நிறுத்தியுள்ளது என்பது அவற்றில் முக்கியமான தொன்று. இணையம் வழியிலான கையெழுத்து இயக்கமே இந்த மாற்றத்துக்கும் காரணமாக இருந்திருக்கிறது.

நிறத்தோற்றமாயை இந்தியாவில் கறுப்பு, வெள்ளை என வெளிப்படையான நிற வேற்றுமைகள் இல்லாதிருக்கலாம். ஆனால், பழுப்பு நிறத்தின் விகிதாச்சாரம் தனிமனிதன், குடும்பம், சமூகம் என்று எல்லா நிலைகளிலும் சகல உறவுகளிலும் முக்கிய வினையாற்றுகிறது என்ற உண்மை மறுக்க முடியாதது. ‘வெள்ளையா இருக்கறவன் பொய் சொல்ல மாட்டான்’ என்ற வடிவேலுவின் நகைச்சுவைக் காட்சி வெகுபிரசித்தம். மாதவன் கதாநாயகனாக நடித்த அந்தத் திரைப்படத்துக்கு ‘ஃபேர் அண்ட் லவ்லி’ விளம்பரக் கூட்டாளியாக இருந்தது என்பதையும் மறந்துவிடக் கூடாது. ஆண்களுக் கான முகப்பூச்சுகளை அறிமுகப்படுததும் விளம்பரமாக அந்தத் திரைப்படத்தையொட்டி போட்டிகளும் நடத்தப்பட்டன.

ஆண்களும் விதிவிலக்கல்ல

இந்த நிறத்தோற்ற மாயைக்கு ஆண்களும் விதிவிலக்கல்ல. ஆனாலும், பெண்களே முக்கிய இலக்கு. நிறம் மட்டுமில்லை, பெண்களுக்கு உடல் மெலிவும் அழகென்று உபதேசிக்கப்படுகிற நாடு இது. சரிபாதிக்கும் மேற்பட்ட பெண்கள் குருதிச் சோகைக்கு ஆளாகியிருக்கும் நாட்டில், உடல் மெலிவுக்கான விளம்பரங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பது முரண்நகைதான். அடுத்து, பெண்களின் சருமத்தில் முடிகளை நீக்குவதற்கான பூச்சுகளுக்கும் ஒரு சந்தை உருவாகிக்கொண்டிருக்கிறது.

அழகு என்பதற்குப் பொது வரையறைகள் எதுவுமில்லை. மண்ணில் பிறப்பெடுக்கும் எந்த உயிரும் எதிர்பாலினரை ஈர்க்க ஏதோவொரு தனித்துவத்தைத் தன்பால் இயற்கையாகவே கொண்டிருக்கிறது. இனத்தைப் பெருக்கும் உயிரின் இயல்புக்கு அதுவே ஆதாரம். ■

நன்றி: த ஹிந்து தமிழில்

உலக நோய் நிலைமை

கேட்டால் போடவென
கொண்டு திரிவாரும்
வாழும் உலகத்தில்
ஆபத்து தானதிகம்
வெளிநாட்டு சம்பந்தம்
மதிப்பிழந்து போச்சு
டொலருக்கு மதிப்பிருக்கு
ஆள்வந்தா அச்சமிருக்கு
அடுத்த வீட்டையே
அணுகப் பயமிருக்கு
இங்கே இருந்திருந்தால்
உயிரோடு இருந்திருப்பார்
அங்கெல்லோ போயின்று
கொத்தாக மடிகின்றார்
உலகத்தில் ஆரவாரங்கள்
அடங்கிப் போனபின்னே
ஓசோன் படலமே
நிம்மதி கண்டதாம்
இமயம் தெரிகிறதாம்
மாசடைவு குறைகிறதாம்
பூச்சிகள் பெருகியதாம்
இப்படிப் பலகதைகள்
உண்மையோ யானறியேன்
இறுக்கம் தளர்ததுமே
முடக்கமதை மறந்து
நெருங்கி மொய்க்கின்றார்
மோசநிலை தாமறியார்
உற்பத்தி குறைகிறது
உலக வர்த்தகமும்
உடற்பயிற்சி தானுமில்லை
பலருக்கு உழைப்பில்லை
உணவுக்கும் வழியில்லை
நிவாரணம் விளம்பரம்
கல்வியில் களங்கம்
கணனியில் தஞ்சம்
இளமையை வீணடிக்கும்
இனியென்று விடிவுவரும்
பரீட்சைகள் இல்லை
படிதாண்ட வழியில்லை
விமானப் பயணமில்லை
வீண்செலவுபல இல்லை
நோயென்று புறணியில்லை
நன்மைக்கும் குறைவில்லை
தீமைக்கும் அளவில்லை
குடும்பத்தில் தினம்தினம்
குழப்பமோ குதாகலமோ
அவரவர் தலைவிதியே
சும்மா இருந்துகொண்டே
சம்பளம் பெறுபவரும்
தொழிலிழந்து தவிப்பாரும்
பொருள்வாங்கி குவிப்பாரும்
களைத்து ஒய்ந்திட்டார்
உழுத்து எறிவாரும்
சலித்துப் போய்விட்டார்
சமூக இடைவெளி
பேணாத கற்றவரும்
களவாய் கல்விக்கு
பாலகரைப் பல்சரில்
கொண்டு திரிவாரும்
ஊரடங்கு என்றாலும்
குச்சொழுங்கை மவுசுதான்
இப்படி அவரவர்
என்றால் கொரோனா
எங்கேதான் போயொழியும்
எங்களைத்தான் பதமாக்கும்
தானாக அது இரங்கி
வராவிட்டால் வாழ்வுண்டு
நாங்களே வரவேற்று
வெத்திலை வைத்துவிட்டால்
சுற்றம் சொந்தமென்று
முற்றாக கருவறுக்கும்
பிறளதிரி எமக்கேனோ
தெரிந்தும் முட்டாளாய்
சுயநலமாய் வாழாமல்
கண்முன்னே பிள்ளைகுட்டி
பரிதவிக்கப் பார்க்காமல்
சமூகப் பொறுப்புடனே
சரித்திரமாய் வாழ்ந்திடுவோம்.

கசாமா எப்பிழப் போகுது வாழ்க்கை...?

–வேலணையூர் தாஸ்

நாங்கள் தேர்தலில் நிற்பதில்லை.
கட்சி மாறுவதில்லை
யாருக்கும் வாக்குறுதி வழங்குவதில்லை.
வஞ்சகம் செய்வதில்லை. துரோகம் நினைப்பதில்லை.
அறம், தர்மம், ஒழுக்கம் என்றெல்லாம் பம்மாத்து
காட்டுவதில்லை .
ஒரே மொழி
ஒரே கடவுள்.
எம் தேசத்திற்கு எல்லையில்லை .
சில சமயம் சண்டையிடுகிறோம் .
ஆனால் ஆயுதம் பாவிப்பதில்லை
என்னசெய்வது போராட்டம்
உயிர் வாழ்வின் குணம் .
ஆனாலும் சாதிப்பதில்லை.
மறுநாள் சமாதானம் ஆகிறோம்.
காலல் காக்கிறோம்
சிலசமயம் களலெடுக்கிறோம்.

ஆனால் கள்ளக் கணக்கெழுதுவது இல்லை.
சில சமயம் களி கொண்டு பாடவும் செய்கிறோம்
நீங்கள் தான் கண்டுகொள்ளவதில்லை
அதிகநேரம் விழிப்பு அவசியமனால் தூக்கம்
இயன்றவரை இயற்கையாய் வாழ்கிறோம்.
வளர்ப்பவர்களுக்கு விசுவாசமும். நன்றியும்
உடையவர்களாக இருக்கிறோம்

ஒன்று சொல்ல. மறந்து விட்டேன்
வேறென்ன நாய்போல போகிறது வாழ்க்கை.

கசாமா. ஒரு நாயின் பெயர்

energy evolved (pvt) Ltd.

E. B . CREASY & CO. PLC
Since 1878

முதலீடு

நீங்களும் சூரிய ஒளியிலிருந்து
மின் சாரத்தை உற்பத்தி செய்து
இலங்கை மின்சாரசபைக்கு விற்பனை
செய்வதன் மூலம் சிறந்ததொரு மாதாந்த
வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் ...



சிறிய, நடுத்தர, பாரிய அளவிலான முதலீடுகள்.

அரச அங்கீகாரத்துடன் இலங்கை மின்சார சபையினால்
20 வருடங்களுக்கு செய்து கொள்ளப்படும் வலுவான ஒப்பந்தம்.

மத்திய வங்கியால் வழங்கப்படும் மானிய வட்டி
அடிப்டையில் இலகுவான முறையில் கடன் வசதி.

சிறிய முதலீட்டின் மூலம் உங்களது வீட்டு மின்
கட்டணத்தை (00 ரூ) பூச்சியம் ரூபாய் ஆக்கமுடியும்.

சூரிய ஒளி மின்சக்தி தொழில் நுட்பங்களில் 18 வருட அனுபவம்.

அலகு ஒன்றிற்கு ரூபாய் 22/- மின்சார சபையிடம்
இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

வழமையான மின் கட்டணம்	முதலீடு
3363.00	185000.00
6763.00	285000.00
13963.00	495000.00

SPECIAL OFFERS ARE AVAILABLE

ENERGY EVOLVED (PVT) LTD

071 1387066

வாடிக்கையாளர் சேவை நிலையம்
மட்டக்களப்பு கல்லடி பாலம்
மீன் இசை பூங்கா, கட்டடத்தொகுதி.

தெய்வ சக்தி வாய்ந்த

மண்ணாகிறது. அதன்தத்துவார்த்தஉண்மையையும் வெளிப்படுத்தி நிற்பது திருநீறு.

நெற்றிப் புருவமே எல்லா நரம்புகளின் மையமாகக் கருதப்படுகிறது. அவ்விடத்தே விபூதி தரித்து, சந்தனம், குங்குமம் போன்ற குளிர்மையான சக்தி மிக்க ஔடதங்களைத் தரிப்பதனால் பல நோய்களிலிருந்து மனிதன் பாதுகாக்கப் படுகிறான் என்ற உண்மையை அனைவரும் உணரவேண்டும்.

சிவாயநம என்று உச்சரித்து நீறு அணியும் சைவ மரபில் உண்மை ஆழத்தைப் பலர் இன்று அறிவ தில்லை.

பிறப்பெடுக்கும் எவரும் முடிவில் பிடிசாம்பலாவதுதிண்ணம். அதனால் நீறு அணிந்து நிலையில்லா வாழ்வை நாமும் உணர்ந்து பாருக்கும் உணர்த்த வேண்டும். எதிலும் அதிகமான ஆசை வைக்காமல் இருக்கவேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துவது திருநீறு.

திருநீறு எத்தகைய மருத்துவ சக்தி மிக்கது என்பதை 'அகத்திராயர் பரிபூரணம்' என்ற நூலில் அகத்தியர் அற்புதமாக விளக்கியுள்ளார்.

பேணி அணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு என்ற சம்பந்தப் பெருமானின் வார்த்தை பெறுமதியானது. நீற்றுக்கு மதிப்புக் கொடுத்து நித்தமும் அணிபவர்கள் வாழ்வில் தோற்றுப் போவ தில்லை. இறப்பைத் தடுக்கும் ஆற்றல் நீறுக்கு இருப்பதனைஅருளாளர்கள்விதந்துரைத்துள்ளனர்.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு'

என்பது நம்பிக்கையோடு அணிபவர்கள் அறிந்து கொண்ட உண்மையாகும்.

விசக்கடிக்கு அரிய மருந்தாக விபூதியை எம்முன்னோர் பயன்படுத்தினர். திருநீற்றுக்கு நெற்றியிலுள்ள நீரை உறிஞ்சி ஆவியாக்கும் சக்தி உண்டு. அது மனித பாதுகாப்புக்கான கவசம் என்பதை நாம் உணரவேண்டும். பிணி நீக்கும் நீறை அணிந்து ஆனந்தமாக வாழ்வோமாக!

போதைக் குற்றத்தின்

சிறைச்சாலைகள் தண்டனைச் சாலைகளாக அன்றி சீர்திருத்தப் பள்ளிகளாக இருக்கவேண்டும்,

இயங்க வேண்டும் என்கிற குரல்கள் வலுத்துவரும் நிலையில் இலங்கைச் சிறைச்சாலைகள் குற்றங்களின் பிறப்பிடங்களாக உருமாறியிருப்பது கவலை தரும் விடயம். குறிப்பாகப் போதைப் பொருள் குற்றங்களின் பிறப்பிடமாகச் சிறைச்சாலைகளே இருக்கின்றன என்பது பெரும் கொடுமை.

இலங்கை அதிபர் கோத்தாபய ராஜபக்சவும் அண்மையில் இது தொடர்பில் தனது கவனத்தைச் செலுத்தியிருந்தார். சிறைகளில் இருந்து இயக்கப்படும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தவும் சிறைகளில் இருந்து கட்டுப்படுத்தப்படும் போதைப் பொருள் வர்த்தகத்தின் வலைப் பின்னலை உடைக்கவும்துரிதமாகநடவடிக்கைஎடுக்கப்படவேண்டும் என்பது அவரது வலியுறுத்தலாக இருந்தது.

இதையடுத்துஅதிகாரிகள்துரிதமாகநடவடிக்கையில் இறங்கியபோது, முக்கிய சிறைகளில் இருந்து அதிகாரிகளால் பல கைத்தொலைபேசிகள் கண்டெடுக்கப்பட்டன. இறுக்கமான கட்டுப்பாடுகளும் சோதனைகளும் உள்ள சிறைகளில் அங்குள்ள காவலர்கள் அதிகாரிகளின் ஆதரவும் உதவியும் இன்றி தொலைபேசிகள் மற்றும் போதைப் பொருள் என்பனசிறைகளுக்குள் நுழையமுடியாதுஎன்பதை சிறு பிள்ளையும் புரிந்துகொள்ளும்.

யாழ்ப்பாணம் பூம்புகார் பகுதியில் 39 வயதுப் பெண் ஒருவரைப் போதைப் பொருளுடன் காவல் துறையினர் கைது செய்தனர். அவரிடம் நடத்தப் பட்ட விசாரணையில் சிறைக்குள் இருக்கும் ஒருவர் தொலைபேசி மூலம் தந்ததகவலின்அடிப்படையிலேயே போதைப் பொருளை விற்பனை செய்வதற்காகத் தான் எடுத்துச் சென்றுகொண்டிருந்தார் என்கிற உண்மை காவல்துறையினருக்குத் தெரிய வந்தது.

இவ்வாறு குற்றங்களின் பிறப்பிடமாக, ஊற்றுக் கண்ணாக சிறைச்சாலை இருக்கும் நிலை உடனடியாக மாற்றப்படவேண்டியது மிக மிக அவசியம். இல்லையேல் போர் தின்ற இந்தப் பூமியின் கொஞ்ச நஞ்ச எச்சங்களையும் கறையான்கள் போன்று இந்தப் போதைப் பொருள் பயன்பாடு அழித்துவிடும்.

எங்கட வோட்டு

போடு! எனக்குத்தான் போடவேணும்" என்று வேண்டி நிற்கும் சிலரும் 'சிந்திச்சுப் போடுங்கோ!" எனக் கேட்டு நிற்கும் வேறு சிலருமாகக் கூடி நிற்கும் கூட்டத்திலிருந்து யாரைத் தெரிவு செய்வது?

ஆனால் சுப்பையர் ஒரு கட்சியை ஒரு வேட்பாளரை மனதில் நினைத்திருப்பது அவருக்கு மாத்திரந்தான் தெரியும் என்றாலும் தனது மகன் சாரங்கன் யாரை நினைத்திருக்கிறான்? என்பதை அறியும் ஆவல், அவரைப் பல கோணங்களிலும் சிந்திக்கத் தூண்டியது. தான் நினைப்பவருக்கே அவனையும் வாக்களிக்கத் தூண்டவேண்டும் என்ற ஆசையுடன் 'சாரங்கா?.." மகனை அழைத்தார்.

'என்னப்பா?"

'நீ யாருக்கு வோட் போடப் போறாய்? நான் "இந்தச் சின்னத்துக்குத்தான் வாக்களிக்கப் போறேன்" என்று சொல்லிக் கொண்டே அந்தச் சின்னத்தின் படத்தைக் காட்டினார். அந்தச் சின்னத்துக்கே சாரங்கனும் வாக்களிக்கவேண்டும் என்று வலியுறுத்தும் வகையிலேயே அவரது செய்கை அமைந்திருந்தது.

தந்தையின் வார்த்தைகளைக் கேட்டுப் புன்னகைத்த சாரங்கன் 'இந்தத் தேர்தலில் நிற்பவர்கள் எவருமே எங்கள் இனத்தின் அரசியலுக்குப் பொருத்தமானவர்களாகக் காணவில்லையே! நான் எவருக்கும் வாக்களிக்கப் போவதில்லை" என்றான் முடிவாக.

'வாக்களிக்கப்போவதில்லை" என்ற வார்த்தை சுப்பையரின் காதில் அறைந்த மாத்திரத்திலேயே 'அடே மடையா! வாக்களிக்கிறது உனது உரிமை. அதை நீ பயன்படுத்தாமல் விடக்கூடாது யாரையாவது தெரிஞ்சு, உள்ளதுக்க வள்ளிசா ஒரு கட்சிக்கு உன்ரை வாக்கைப் போடு. பொருத்தமானவரைத் தெரிஞ்செடுக்கிறது கஷ்ரந்தான் என்ன செய்யிறது எங்கட தலையெழுத்து!" என்றார் சற்றே சலிப்போடு.

'வாக்காளர் தொகைக்கும் வேட்பாளர் தொகைக்கும் உள்ள வேறுபாட்டால் எமது சமூகம் காணாமற் போகப்போறதை இந்த சனநாயகத் தேர்தல் முறை மறைத்து வைத்திருக்கிறது. இதனைத் தெரிந்துகொள்ளாத வேட்பாளர்களுக்கு எப்படி நான் வாக்களிப்பது?" சாரங்கனின் கேள்வியில் உண்மை இருந்தது.

தனக்கு வேட்பாளர் வாய்பளிக்காமையால் தனித்துக் கட்சி தொடக்கியவையும் தன்னைத் தலைவராக முன்னிலைப்படுத்தாமையால் சுயேச்சையாய்த் தலையாகி நின்று வாக்குக் கேட்கிறவையும் சாதியையும் சமயத்தையும் சொல்லி இன ஒற்றுமையைக் குலைக்கிறவையும்தானே இங்க குழுப் பிரிந்து வாக்குக் கேட்கினம்.

சுப்பையரின் மனத்திலும் குழப்பம்.

அந்த நேரம் வேலிக் கடப்பையைத் தள்ளித் திறந்து வீட்டு வாசலுக்கு வந்த மூவர்

'எப்படி அண்ணை சுகமாய் இருக்கிறியளோ?" சுப்பையா அண்ணையைச் சுகம் விசாரித்தனர். சுப்பையர் என்றுமே கண்டறிந்திருக்காத முகங்கள் கைகளிலே தேர்தல் நோக்கிலே அச்சிடப்பட்ட காகிதங்களோடு...!

'ஓம் தம்பியள்! நாங்க நல்ல சுகம்!"

'நாங்கள் இந்தத் தேர்தலில் வேட்பாளர்களாய் நிக்கிற இந்தக் குழுவுக்காக வோட் கேட்க வந்திருக்கிறம்" வந்தவர்களுள்ளே ஒருவர் பேசினார்.

கையிலிருந்த தாளில் பெரிதாக அச்சிடப்பட்டிருந்த சின்னத்தை உயர்த்தினார்.

சுப்பையரோ சின்னாச்சியோ சாரங்கனோ எதுவுமே பேசவில்லை.

'எங்கட இந்த வேட்பாளர்களை ஆதரிச்சு வாக்குப் போட்டீங்களெண்டால் எங்கட இனம் பாதுகாக்கப்படும் காணாமற்போனவையைக் கண்டறிஞ்சு தருவம். காணிகளை விடுவிப்போம் படிச்ச பிள்ளையளுக்கு வேலை வாய்ப்புக்களை செய்து தருவம்.....!" அவர்கள் பேசிக் கொண்டே போனார்கள்.

சுப்பையர் பேசிக் கொண்டிருந்தவரின் வாயையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அருகில் நின்ற சின்னாச்சி அவர்களின் தொடரும் கதையை நிறுத்தும் வகையில் 'எங்கட வோட்டு உங்களுக்குத்தான்!" என்றாள்

அதனை ஆமோதிப்பதாகச் சுப்பையர் ஓணான் போலத் தலையை ஆட்டி 'எங்கட வோட் உங்களுக்குத்தான்!" என்றார். இவர்கள் விரைவில் வெளியே போனால் போதும் என்றிருந்தது அவருக்கு.

சாரங்கன் மௌனமாக நின்றிருந்தான்.

மாற்றுத் தலைமை

சபையின் முன்னாள் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் கூட வரி விலக்கு வாகனம் உட்பட அரசாங்கத்தினால் வழங்கப்படக்கூடிய வரப்பிர சாதங்களை மல்லுக் கட்டிப் பெற்றுக்கொள்ளவே முயன்றதைப் போல மக்களின் உரிமைக்காக எதைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார். கதிரைப் போட்டியிலும், நான் பெரிது – நீ பெரிது போட்டியிலும் வந்ததைக் கூடப் பயன்படுத்தாமல் காலத்தை வீணடித்தது தான் மிச்சம்.

தவிர, கூட்டமைப்பு உண்மையிலேயே தவறு இழைத்திருக்கிறது என்றே வைத்துக் கொண்டாலும், கூட்டமைப்பை விட்டு வெளியேறி - கூட்டமைப்புக்கு எதிராகக் 'கம்பு சுத்துகின்ற' அத்தனை பேரும் ஏன் ஒரே கட்சியின் கீழ் - ஒரே குரலாக ஒலிக்கவில்லை. ஏற்கனவே கூட்டமைப்புக்கென இருந்த வாக்கு பலத்தைச் சிதைத்துக் கூறு போட்டுக் கொண்டவர்கள் அனைவரும் ஒன்றாக நின்றாலாவது மக்களும் அவர்களின் 'நேர்மையை' நெஞ்சில் நிறுத்தி வாக்களித்திருக்கமுடியும். அவ்வாறு இல்லாமல் தலைமைப் பதவிக்காகவும், கதிரைப் போட்டிக்காகவும் கன்னை பிரிந்து நின்று அடிபட்டுக் கொள்வது அபத்தமல்லவா?

ஆக, 'மாற்றுத் தலைமைக்' கோசம் என்பது தங்கள், தங்கள் சுகபோகங்களுக்கான முஸ்தீபு என்பதைத் தாண்டி, தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைத்து, குளிர்காய நினைக்கும் பேரினவாத , சர்வதேச சக்திகளின் நிகழ்ச்சிநிரலாகவே நோக்கப்படுகிறது.

சிங்கள மக்கள்

அனைத்துச்சிறிய விகாரைப் பிக்குகளையும் அழைத்துச் சந்தித்து 19 ஆம் திருத்தச் சட்டமூலம் ஏன் மாற்றப்பட்வேண்டும், ஏன் சிங்கள மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைத் தன் தலைமையிலான ஆட்சிக்கு வழங்கவேண்டும் என்று விளக்கமளிக்கிறார்.

நல்லாட்சி அரசு பல விடயங்களுக்கு ஆணைக்குழுக்களை நியமித்தபோதும் அவை உரிய இலக்கை அடையாதுகாலம்வீணடிக்கப்பட்டது. ஆனால், கோத்தபாய அறிமுகப்படுத்தியுள்ள செயலணிகள் அவை உருவாக்கப்பட்ட மறுநாளே களத்தில் இறங்கிச் செயற்படுகின்றன.

ராஜபக்சக்களின் ஆட்சிக்கு சிங்கள மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்க வேண்டும்என்றவகையில்அவர்கள் தற்போது அரசியல் மயப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கோத்தாபய பதவிக்கு வர முன்னர் அவரால் உருவாக்கப்பட்ட வியத்மக, மற்றும் எலிய அமைப்புகள் பௌத்த பிக்குகள், இராணுவக் குடும்பங்கள் என மிகப் பெரிய கட்டமைப்புகளின் ஆதரவோடு சிங்கள மக்களும் தாமே தம்மை உருவாக்கிக்கொள்ளவேண்டும் என நினைக்கின்றனர். தமிழ் முஸ்லிம் தலைவர்களின் கட்டுப்பாடற்ற வாய் வார்த்தைகளே இதற்கு வித்திட்டன என்று அண்மையில் மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டிருந்தார். சிங்கள மக்கள் வரலாற்றில் இருந்து படிப்பினைகளைப் பெற்றுக்கொண்டார்கள் என்பதே உண்மை. நண்பர் காமினி கூறியதுபோல தற்போதுள்ள சூழலில் முப்பது வருடகாலப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்த தலைவரான மகிந்தவின் தலைமைத்துவம்கூட தம்மைப் பாதுகாப்பதற்குப் போதாது என்ற எண்ணமே சாதாரண சிங்கள மக்களிடம் இருக்கிறது.

எங்கே போகிறோம்?

எழுத்தாளர் மு.சிவநேசன் எழுதும் புத்தம் புதிய தொடர். அடுத்த வாரத்தில் இருந்து உங்களுக்காக. வாசிக்கத் தவறாதீர்கள்.



■ அகீல்

திகாமடுல்ல தேர்தல் மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோகுமா? கருணாவின் வருகையால் அச்சம்!

கீழக்கிலங்கையில் மூவின மக்களும் இணைந்து வாழும் முக்கிய மாவட்டமாகத்திகழும் அம்பாறை மாவட்டம். திகாமடுல்ல தேர்தல் மாவட்டவாகவும் திகழ்கின்றது.

தற்போது திகாமடுல்ல மாவட்ட தேர்தல்களம் வெகுவாகச் சூடு பிடித்துவரும் அதேவேளை வேட்பாளர்கள் பரப்புரைகளிலும் வாக்கு வேட்டையிலும் மிகுந்த ஆர்வத்துடனும், பிரயத்தனங்களுடனும் ஈடுபட்டு வருகின்றனர்.

பொதுமக்கள் சந்திப்புகள், கருத்தரங்குகள், சமூக வலைத் தளங்களினூடானநேர்காணல்கள், பேச்சுக்கள், கொள்கை விளக்கங்கள், ஊடகவியாலாளர் சந்திப்புக்கள் என்பன இங்கு இடம் பெறுவதுடன், சுவரொட்டிப் போர்களும் இடம்பெற்றுவருகின்றன.

சில மேடைகளில் கட்சிகள் வேட்பாளர்கள் பற்றிய விமர்சனங்களும் இடம்பெறுவதுடன், வாக்காளப் பெருமக்களின் தாம் ஒன்றுகூடும் பொது இடங்கள், உணவகங்கள், தேநீர்க்கடைகள் போன்றவற்றில் வாதப் பிரதி வாதங்களுக்கும் குறைவில்லா நிலமையுள்ளது.

இதனால் பல இடங்களில் 'இங்கு அரசியல் பேசவேண்டாம்' – 'அரசியல் பேசுவதைத் தவிர்க்கவும்' என்பன போன்ற வாசகங்களைக் கொண்ட அறிவித்தல் அட்டைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

திகாமடுல்ல

திகாமடுல்ல மாவட்டத்தில் எல்லாமாக ஏழு நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் ஒரு வேட்புமனுவில் 10 பேர் என்ற அடிப்படையில் எல்லாமாக 540 பேர் இம்முறை பொதுத்தேர்தல் களத்தில் களமிறங்கியுமுள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்களுடன் பல புது முகங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சிறீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கை தமிழ் அரசுக்கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், அகில இலங்கை தமிழ் மகா சபை, தேசிய காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறி லங்கா சமாஜவாதிக் கட்சி, ஈ.பி.டி.பி, ஜே.வி.பி, லிபரல் கட்சி, தேசிய ஜனநாயக முன்னணி, ஜனசெத பெரமுன, நவசிகல உறுமய உள்ளிட்ட 20 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும், 34 சுயேச்சைக் குழுக்களுமாக 54 அணிகள் அம்பாறையில் போட்டியிடுகின்றன.

கடந்த தேர்தல்

2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி 1,51,013 வாக்குகளைப் பெற்று நான்கு ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 89,334 வாக்குகளைப் பெற்று இரு ஆசனங்களையும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி 45,421 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் பெற்றுக் கொண்டன.

தகுதி

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்துக்குட்பட்ட நான்கு தேர்தல் தொகுதிகளிலிருந்தும் 2019ஆம் ஆண்டு வாக்காளர் பதிவின்படி மொத்தமாக 5 லட்சத்து 13 ஆயிரத்து 979 வாக்காளர்கள் பொதுத தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை அதிபர் தேர்தலின்போது 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பொதுஜன பெரமுன பசில் ராஜபக்சவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஆரவளித்த ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு இம்முறை பொதுத் தேர்தலில், திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட முன்வரவில்லை.

இந்த மாவட்டத்தில் முஸ்லிம்களின் பிரதிநிதித்து வத்தை உறுதிப்படுத்தும் வகையில் சகல முஸ்லிம் கட்சிகளையும் ஒரு குடையின் கீழ் ஒற்றுமையுடன் போட்டியிடவைக்க எடுத்த முயற்சி பலிக்காததால், 30 பேர் போட்டியிடும் இடத்தில் தாமும் மேலும் ஒருவராகச் சேர்த்து போட்டியிட விரும்பாது ஒதுங்கிக் கொண்டுள்ளார்ஐக்கியசமாதானக் கூட்டமைப்பின் செயலர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹஸனலி.

வேறு சில மாவட்டங்களில் ஒன்றித்து போட்டியிடும் முஸ்லிம் காங்கிரசும், அகில இலங்கை மக்கள் காங்கிரசும் திகாமடுல்ல மாவட்டத்தில் எதிரும் புதிருமாகக் களத்தில் குதித்துள்ளன.

அதேபோல் முன்னாள் அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரசும் தனித்துப் போட்டியிடுவதால் முஸ்லிம் பிரதேசங்களில் தேர்தல் பெரிதும் களைகட்டியுள்ளது.

இம்முறை குறிப்பிட்ட சில முன்னாள் பிரதிநிதிகள் தேர்தலில் மண்கவ்வக்கூடும் என்ற எதிர்பார்ப்புக்களும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

கருணாவின் வருகை

முன்னாள் பிரதி அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவருமான வினாயகமூர்த்தி முரளீதரன் எனும் கருணா அம்மன் இம்முறை பொதுத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் களமிறங்கியுள்ளமை தமிழ் மக்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியில் களமிறங்கியுள்ள கருணா அம்மான், கடந்த காலங்களில் அரசின் அபிவிருத்தி மற்றும் பல்வேறு வகையிலும் புறக்கணிக்கப்பட்டுவந்த அம்பாறை மாவட்டதமிழ் மக்களுக்கு விமோசனம் பெற்றுக் கொடுக்கவே இங்கு போட்டியிடுகிறேன் என்று பறைசாற்றவும் தவறவில்லை.

இதேவேளை தனது முஸ்லிம் விரோத, இனவாதக்கருத்துக்களை மேடைக்கு மேடை அள்ளிவிசும் கருணா, முஸ்லிம் அரசியல் தலைமைகளைக் குறிவைத்து கீழ்த்தர வார்த்தைகளால் குதறும் நிலையும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. ஒரு சிறு பகுதி மக்களிடம் அது வரவேற்பையும் கைதட்டல்களையும் பெறுவதையும் மறுப்பதற்கில்லை.

'முஸ்லிம் அரசியல்வாதிகளான இந்த ... போய் எமது மக்கள் நக்கித்திரியத் தேவையில்லை அவர்களது திமிர் கூடுகிறது. அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களை, எமது இருப்பைக் காப்பாற்ற வேண்டும்' என்றுகூட திருவாய் மலர்ந்திருக்கும் கருணா,

முஸ்லிம்கள் இந்தோனேசியாவைச் சேர்ந்த வந்தேறு குடிகள் என்ற புதிய கண்டுபிடிப்பையும் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில்தான் கருணாவின் வருகையால், அம்பாறை மாவட்டத்தமிழ்மக்களின்நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் இம்முறை கேள்விக் குறியாகிவிடுமோ? என அரசியல் அவதானிகள் அச்சம் வெளியிட்டும் வருகின்றனர்.

அம்பாறையில் உள்ள தமிழ் மக்களில் 95 வீதம் தமக்கு வாக்களித்தால் இரு தமிழ்ப் பிரதி நிதிகளைப் பெற முடியுமென்ற நம்பிக்கையையும் கருணா வெளிப்படுத்தியுள்ளார்.

போதாக்குறைக்கு முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம்.ஹரீஸ், 'கருணா இங்கு வென்று காட்டட்டும்' என பகிரங்க சவால் ஒன்றையும் விடுத்துள்ளார்.

அம்பாறை மாவட்டத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஏதாவது ஒரு அணிக்கு ஒற்றுமையாக வாக்களித்தார்களானால் கருணா சொல்வதைப் போன்று இரண்டு ஆசனங்களை அவர்களால் பெறமுடியும். வாக்குகள்பிரிந்துசென்றால்கிடைக்கின்ற ஒரு ஆசனம்கூடக் கிடைக்காமல் போய் விடக்கூடிய ஆபத்து இருக்கின்றது. இனவாதம் தக்கித் தமிழ் மக்கள் மனங்களை கருணாவால் வெல்லத்தான் முடியுமா? காலம் பதில் சொல்லும்.

■

மூளைக்கு வேலை - விடைகள்

1. 3.5+4.5
   \+ +
   9.5-3.5
2. 5 - வலதுகைப் பழக்கம் உடையவரால் இடது கையால் பரிமாற முடிவது மிகவும் சிரமம்.
3. 17 சதுரங்கள்
   1X1 சதுரங்கள் 6
   2X2 சதுரங்கள் 6
   3X3 சதுரங்கள் 3
   4X4 சதுரங்கள் 2
4. வலதுபுறம் செல்கிறது.
   ஏனெனின் அதன் கதவு இந்தப் பக்கத்தில் காணப்படவில்லை
5. 3 - 5,6 மற்றும் 7 குவளைகள் மூடப்பட்டுள்ளன. திறக்கப்பட்ட நிலையில் 2ஐ விட 3 கீழே உள்ளது.

KUDIL PRODUCT
ECO-FRIENDLY

கழுகு மடல் தட்டுக்கள்
விற்பனைக்கு

12" - Rs.360 - 12 தட்டுக்கள்
10" - Rs.300 - 12 தட்டுக்கள்
08" - Rs.240 - 12 தட்டுக்கள்
06" - Rs.192 - 12 தட்டுக்கள்

மேலும்
தொடர்புகளுக்கு
No. 74/1, A35, Visvamadu.
kudilproduct@gmail.com
+94 71 7777 559

திருகோணமலையில் ...
Managed By :-
AVEO ENGINEERING SERVICES (PVT) LTD
BEYOND YOUR EXPECTATION

AVEO SERVICE CENTER
Specialist in Vehicle Care

OIL CHANGING
INTERIOR CLEANING
QUICK WASH
FULL SERVICE

FOR YOUR ALL KIND OF VEHICLE CARE

TP. 0775576592, 0772326592

463, KANDY ROAD, ANDANKULAM,
PALAIYOOTHU,TRINCOMALEE.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781